உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-141

ஜுலை 1-15, 2022

விருப்ப சந்தா இதழ்




## தினமும் இராமேஸ்வரம் வந்து செல்லும்

# பூரி ஜெகன்நாதர்



# தீராத நோய் தீர்க்கும் அக்னி மந்திரம்

தீர்க்க முடியாத நோய்களை தீர்க்க கூடிய மந்திரம் பற்றி பார்க்கப் போகிறோம்.

அதிகாலையில் எழுந்து, தலைக்கு நீராடி, பூஜை அறையை சுத்தம் செய்து விளக்கு ஏற்றி, பூஜை அறையில் அமர்ந்துக் கொண்டு அக்னிப் பகவானை வணங்கி, கீழ்க்கண்ட மந்திரத்தை செபிக்க வேண்டும்.

மந்திரம்..!!

"ஓம் நம பரமார்த்யாய புருஷாய மஹாத்மநே
அரூப பஹுரூபாய வ்யாபிணே பரமாத்மநே.

இந்த மந்திரம் செபிக்கும் போது, நம்பிக்கையோடு இறைவனை மனதார நினைத்து தியானிக்க வேண்டும்.

இந்த மந்திரத்தை 1008 முறை 48 நாட்கள் செபித்து வர தீர்க்க முடியாத நோய்கள், மருத்துவரால் கைவிடப்பட்ட நோய்கள் குணமாகும்.

# வாழ்க்கையில் நிம்மதி கிடைக்க இந்த நேரத்தில் இந்த மந்திரம் சொல்லுங்கள்

கிருத்திகையும், ரோஹிணியும் பிணையும் நேரம் குருபர சக்திகள் திரளும் அற்புத நேரமாகும்.

கிருத்திகையின் நிறைவில் வரும் 12 நிமிடங்களும், ரோஹிணியின் முதல் 12 நிமிடங்களும் சேர்ந்த நட்சத்திரப் பிணைப்பான ஒரு நாழிகை நேரத்தில் ஸ்ரீகிருஷ்ண நாமத்தை இடைவிடாது துதித்து வர மனதில் நல்ல நிம்மதி உண்டாகும்.

இந்த நாழிகை குறிப்பாக வியாழக்கிழமை, ஏகாதசி அன்று அமைந்தால் இன்னும் சிறப்பாகும்.

இதுபோன்ற ஒரு அபூர்வமான நேரத்தில்தான் ஏகலைவனுக்குக் குரு கடாட்சம் கிடைத்தது.



இதனால் அவர் உத்தம நிலைகளை அடைந்தார், கிருத்திகை, ரோஹிணி இரண்டுமே அக்னியான நட்சத்திரங்களாகும், கார்த்திகை, சூரிய கிரக நட்சத்திரமாகின்றது. ரோஹிணி சந்திர கிரக நட்சத்திரமாகிறது.



# கிருஷ்ணர் கூறிய தவ முறைகள்

## உடலால் செய்யப்படும் தவம் (காயக தவம்)

நேரம் தவறாது செயல்படுவது, அளித்த வாக்கை நிறைவேற்றுவது, பூசைகள் செய்வது, தானம் அளிப்பது போன்றவைகள் காயக தவமாகும்.

## பேச்சால் செய்யப்படும் தவம் (வாசிக தவம்)

தெரிந்த உண்மையை மட்டும் பேசுதல், இனிமையாகவும், மென்மையாகவும் பேசுதல், பிறர் மனம் புண்படாது பேசுதல், கேட்பவருக்கு நன்மை பயக்கூடியது மட்டும் பேசுதலே வாசிக தவமாகும். வாசிகத் தவத்தின் பயனால் உண்டாகும் பேச்சுக் கட்டுப்பாடு, ஆன்மீக முன்னேற்றத்தை மேம்படுத்தும்.

## மனதின் தவம் (மானச தவம்)

தீய எண்ணங்களை விட்டு விட்டு, தூய எண்ணங்களுடன், மனதை அமைதியாக வைத்துக் கொள்ளுதலே மானச தவமாகும்.

# குலதெய்வம் தெரியவில்லையா? நிரந்தரமாக வீட்டில் தங்கவேண்டுமா?



குலதெய்வம் என்பது ஒவ்வொரு குடும்பத்தையும் காக்கும் ஆணிவேராகும், இந்த ஆணிவேரை முழுவதுமாக தெரிந்து கொள்ளாமல் இருந்தாலும், பராமரிக்காமல் இருந்தாலும் மரம் பட்டுப் போவதைப் போன்று குடும்பத்தில் குழப்பமும், பிரச்சனைகளும் அதிகரிக்கும்.

சந்தோஷங்கள் நிறைந்த, சகல சௌபாக்கியங்களும் நிறைந்த இனிமையான இல்லமாக ஒரு வீடு மாற வேண்டும் என்றால் நிச்சயமாக அந்த வீட்டில் குலதெய்வத்தின் ஆசீர்வாதம் முழுமையாக நிறைந்திருக்க வேண்டும்.

ஆன்மிகமலர்

ஆனால் இன்றைய காலகட்டத்தில் நகரமயமாதல், பணிச்சுமை, வெளிநாட்டு வாழ்க்கை, என்று வாழ்க்கை முறை மாறிவிட்டதால் குலதெய்வம் இதுதான் என்பது தெரியாமல் இன்று பலர் பல்வேறு அவதிக்குள்ளாகின்றனர்.

உங்களுக்கு குலதெய்வமே தெரியவில்லை என்றாலும் பரவாயில்லை. குலதெய்வம் என்ற ஒரு வார்த்தையை உச்சரித்து, தெரியாத அந்த தெய்வத்தை மனதார நினைத்து தினமும் ஒரு முறையாவது வீட்டில் இருக்கும் பெண்கள் கட்டாயம் பூஜை அறையில், வழிபாடு செய்ய



www.aanmeegamalar.com

வேண்டும். குலதெய்வம் தெரிந்தால் கட்டாயமாக தீபமேற்றும் போது, அந்த குலதெய்வத்தின் பெயர், அந்த வீட்டுப் பெண்ணின் வாயால் கட்டாயமாக உச்சரிக்கப்பட வேண்டும். வீட்டில் தீபம் ஏற்றும்போது, ‘குல தெய்வமே எங்கள் குலத்தைக் காக்க வேண்டும்’ என்று ஒரு முறை நினைத்தாலே போதும் குலதெய்வம் ஓடோடி வரும்.

இதுதவிர குலதெய்வத்தை நம் வீட்டிலேயே நிரந்தரமாக தங்க வைக்க வேறு ஒரு வழியும் உள்ளது. வருடத்திற்கு ஒரு முறையாவது கட்டாயம் குடும்பத்தோடு குல தெய்வத்தை தரிசனம் செய்ய செல்வம் அல்லவா? அந்த குலதெய்வ கோவிலில் இருந்து குடும்ப உறுப்பினர்கள். அனைவரின் கையாளும் சிறிதளவு மண்ணை எடுத்து, அதனுடன் ஓர் எலுமிச்சம்பழம் துணியில் வைத்து முடிச்சுப்போட்டு வீட்டிற்கு எடுத்து வர வேண்டும். இந்த முடிவினை கொண்டுவந்து உங்கள் பூஜை அறையில் வைத்து, விடுங்கள்.

மறுநாள் காலை பிரம்ம முகூர்த்த நேரத்திலேயே எழுந்து அந்த மண்ணை ஒரு அகலமான தட்டில் கொட்டி கொஞ்சமாக மஞ்சள் தண்ணீர் தெளித்து, மண்ணை சுத்தி செய்துகொள்ள வேண்டும். பலபேர் காலடிபட்ட மண் அல்லவா அது! கொஞ்சமாக மஞ்சள் தண்ணீரை தெளித்தால் அதில் உள்ள தோஷங்கள் நீங்கிவிடும்.அந்த குலதெய்வ கோவிலில் இருந்து எடுத்து வரப்பட்ட மண்ணில், கொஞ்சமாக பச்சை கற்பூரம், ஏலக்காய் 2, கிராம்பு 2, வெட்டிவேர் சிறிய துண்டு, தர்ப்பைப்புல் 1, இந்தப் பொருட்களையெல்லாம் சேர்த்து அந்த மணலுக்கு சாம்பிராணி தூபம் காட்டி, ஒரு சிறிய கிண்ணத்தில் போட்டு பூஜை அறையில் வைத்துக் கொள்ளலாம்.

அப்படி இல்லை என்றால் இந்த மண்ணை ஒரு மஞ்சள் துணியில் போட்டு முடிச்சாக கட்டி, வீட்டில் நில வாசப்படிக்கு உள்பக்கமாக கட்டி வைக்கலாம். அப்படி இல்லையென்றால், ஏதாவது ஒரு அலமாரியின் மேல் பக்கத்தில் யார் கையும் படாமல், இந்த குலதெய்வ மண் முடிச்சை வைத்துவிடலாம். இந்த மணலை முடிச்சு கட்டுவதற்கு முன்பாக கொஞ்சமாக எடுத்து, சிறிய டப்பாவில் போட்டு வைத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய வீட்டில் தீராத கஷ்டங்கள் ஏதேனும் வந்துவிட்டால், அந்த பிரச்சனையை தீர்க்க முடியாமல் தவித்து வந்தால், காலையில் சுத்தமாக குளித்துவிட்டு, இந்த மண்ணை எடுத்து உங்கள் நெற்றியில் குலதெய்வத்தை வேண்டி இட்டுக் கொண்டாலே போதும். பிரச்சனைகள் தானாக மறைந்து போகும்.

வீட்டில் சுபநிகழ்ச்சிகள் தொடங்கும்போது, அது நல்லபடியாக முடிய வேண்டும் என்று இந்த குலதெய்வ மண்ணை தொட்டு நெற்றியில் வைத்துக் கொண்டு, அதன் பின்பு சுபநிகழ்ச்சிகளை தொடங்கலாம். இவ்வாறாக இந்த மண் இருக்கும் வீட்டில் குலதெய்வமே இருந்து காப்பதாக ஐதீகம்.

வருடத்திற்கு ஒருமுறை பழைய மண்ணை கால் படாத இடத்தில் போட்டுவிட்டு, புதிய மண்ணை கொண்டு வந்து வைக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விஷயம்.

## ஆரோக்கியம் காப்போம்...

- ஓமத்தை வெல்லத்துடன் அரைத்து காலில் கட்ட, எவ்வளவு சிறிய கண்ணாடித் துண்டாயிருந்தாலும் வெளியேறி விடும்.
- ஆண்டுக்கு ஒரு முறை மருதாணி இடுவதால் மனக்கோளாறுகள் வராமல் தடுக்கலாம்.






www.aanmeegamalar.com

# பார்வதியின் சாபத்தால் உருவான காவற்பறையன் சங்கரன் கோவில் உருவாக காரணமானவர்

மணிக்ரீவன் என்ற தேவன் பார்வதி தேவியின் சாபத்தாற் பறையனாகிப் புன்னைவனக் காவலனாக இருந்தான். அதனால் அவன் காப்பறையன் என்றும், காவற் பறையன் என்றும் பெயர் பெற்றான்.

கரிவலம்வந்தநல்லூர்ப் பால்வண்ண நாதருக்குப் புன்னைவனத்திலே ஒரு பூந்தோட்டம் இருந்தது. அதற்கும் அவனே காவல். தோட்டத்தின் ஒரு பக்கம் புற்றொன்று வளர்ந்தது. அதை ஒரு நாள் அவன் வெட்ட அதிலிருந்த பாம்பின் வாலும் வெட்டுப் பட்டது. அப்போது அவன் புற்றின் பக்கத்தில் சிவலிங்கம் இருப்பதையும் கண்டான்.

தான்கண்ட நிகழ்வை உக்கிரபாண்டிய மன்னரிடம் தெரிவிக்க ஓடிவந்தான்.

திருநெல்வேலிக்கு மேலே பொருநையாற்றின் கரையிலுள்ள மணலூரில் அரசாண்டிருந்த உக்கிரபாண்டியர் அடிக்கடி மதுரை சென்று மீனாட்சியம்மையையும், சொக்கநாதரையும் வழி பாடு செய்யும் வழக்கமுடையவர். மிகப்பெரிய சிவபக்தர்.

சிவதரிசனத்திற்காக செல்லும்போது, வழக்கத் திற்கு மாறாக பாண்டிய மன்னனுடைய பட்டத்து யானை தனது தந்தத்தால் தரையைக் குத்திக் கீழே விழுந்து புரண்டது. பாண்டியர் ஒன்றும் செய்ய அறியாது திகைத்திருந்தார்.

யானை என்ன செய்தியை சுட்டிக்காட்டுகிறது என்பதை தெரியாமல் குழப்பத்தில் இருந்தசமயத்தில்,




காவற்பறையன் புற்றை வெட்டிச் சிவலிங்கத்தைக் கண்ட நிகழ்வை தெரிவித்தார்.

இரண்டு நிகழ்வும் ஒரே நாளில் நடந்ததையும், இரண்டு நிகழ்விற்கும் ஏதோ காரணம் இருப்பதையும் உணர்ந்து கொண்ட உக்கிரபாண்டிய மன்னன், புற்றினையும் புற்றிடங் கொண்டாரையும், கூழைவாலினதாக்கிய பாம்பினையும் கண்டார்.

அந்த சமயத்தில், சங்கரனார் அசரீரியாக இந்த இடத்தில் கோவில் கட்ட ஆனை பிறப்பித்தார், இறைவனின் ஆனையை ஏற்று பாண்டியர் காட்டை சீர் செய்து அதை மக்கள் வசிக்கும் நாடாக மாற்றினார்.

காவற்பறையன் காண்பித்த இடத்தில் இருந்த சிவலிங்கத்திற்கு கோவில் கட்டி, சங்கரநயினார் கோவிலையும், ஊரையும் தோற்றுவித்தார்.

காவற்பறையனை சிறப்பிக்கும் நோக்கில், அவருக்கு ஒரு சிலையையும் உருவாக் கினார் உக்கிரபாண்டியன், கோவிலில் கோபுரத்தைத் தாண்டியதும் (கோவில் நிர்வாக அலுவலக இடப்புறத் தூணில்) காவற்பறையனுடைய திருவுருவத்தை இப்போதும் காணலாம்.

மேலும், காவற்பறையனுக்கு ஊரில் தெற்கே ஒரு சிறு கோயில் இருக்கிறது. அது இருக்கும் தெரு காப்பறையந்தெரு என்று வழங்கிவந்தது. காப்பறையன் தெரு, தற்போது முத்துராமலிங்கம் தெருவென ஆகிவிட்டது. ஆனால், காவற்பறையன் கோவில் அதே தெருவில் இன்றும் உள்ளது. நித்திய பூஜைகளும் உண்டு. சித்திரைவிழா ஆரம்பமாகு முன்பு, காவற்பறையனுக்குச் சிறப்பு வழிபாடு நடத்திய பின்னரே பெரிய கோயிலிலே கொடி ஏற்றம் நிகழ்வு நடைபெறுகிறது.

## ஆரோக்கியம் காப்போம்...



- ❖ சூடம், சுக்கு, சாம்பிராணி, பெருங்காயம் இவைகளை சம அளவு சேர்த்து, வடித்த கஞ்சியில் கலக்கி மறுபடியும் சூடுபடுத்திமூச்சுப் பிடிப்பு உள்ள இடத்தில் மூன்று வேளை தடவினால் மூச்சுப் பிடிப்பு குணமாகும்.
- ❖ கைகால் வெடிப்பு குணமாக மாசிக்காய், கடுக்காய், விளக்கெண் ணெய், வேப்ப எண்ணெய், தேங்காய் எண்ணெய் சரிசமமாக தடவி வரவும்.
- ❖ நல்ல சுண்ணாம்பு, விளக்கெண்ணெய் கலந்து குழப்பி தடவி வந்தால் பித்த வெடிப்பு குணமாகும்.
- ❖ உடல் இளைக்க சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், செவ்வியம், சித்தரத்தை, உப்பு சேர்த்து பொடியாக்கிக்கொள்ளவும். அரிசியை வறுத்து தூள் செய்து ஏற்கெனவே தூள் செய்த பொடியுடன் சேர்த்து சாப்பிட்டு வர உடம்பு துரும்பாக இளைத்துப்போகும்.



# தேவையை பூர்த்திசெய்யும் சிவ மந்திரமும் அதன் பலனும்



சிவனுக்குரிய மந்திரங்களில் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு சக்தி உள்ளது, அதன்படி ஒவ்வொரு வார்த்தைக்கும் உள்ள சக்தி என்ன என்பதை பற்றி தெரிந்து கொள்வோம்.

இந்த மந்திரங்களுக்குண்டான பலன்கள் பற்றி அகத்திய முனிவரே கூறியுள்ளார்.

அதன்படி ஒவ்வொரு வார்த்தையை தொடர்ந்து 108 அல்லது 1008 முறை சுத்த சித்தியுடன் ஜெபித்தால் என்ன என்ன பலன்கள் கிடைக்கும் என்பதையும் பார்ப்போம்.

| | |
|---|---|
| மசிவயந ஜபித்தாலும், நயவசிம ஜபித்தாலும் | மோகனம் உண்டாகும் |
| சிங் நமசிவய என்று உச்சரிக்க | பயிர்களால் நன்மை. |
| துங் நமசிவாய என்று உச்சரிக்க | வித்துவான் ஆகலாம். |
| ஓங் கங்சிவய என்று உச்சரிக்க | சக்தி அருள் உண்டாம். |
| ஓம் சிங்சிவாய நம என்று உச்சரிக்க | நினைப்பது நடக்கும். |
| ஓம் பங்சிவாய நம என்று உச்சரிக்க | தடைகள் நீக்கும். |
| ஓம் யங்சிவாய நம என்று உச்சரிக்க | துன்பங்கள் விலகும். |
| ஓம் மாங்நமசிவாய என்று உச்சரிக்க | செல்வம் செழித்தோங்கும். |
| ஓம் மங்சிவாயநம என்று உச்சரிக்க | கவலைகள் வற்றும் |
| கெங்ஓம் நமசிவாய என்று உச்சரிக்க | வசிய சக்தி மிகும் |
| ஓம் மங்யங் சிவாய என்று உச்சரிக்க | விஷங்கள் இறங்கும். |
| அங் ரங்ஓம்சிவாய என்று உச்சரிக்க | சாதனை படைக்கலாம். |
| ஓங் அங் சிங் சிவாயநம என்று உச்சரிக்க | சப்த கன்னியர் தரிசனம். |

| | |
|---|---|
| ஓங் வங்சிங் சிவாயநம என்று உச்சரிக்க | முக்குணத்தையும் வெல்லலாம். |
| ஹ்ரீம் நமசிவாய என்று உச்சரிக்க | அரிய பேறுகள் கிடைக்கும். |
| ஐயுஞ் சிவாயநம என்று உச்சரிக்க | ஆறு சாஸ்திரம் அறியலாம். |
| வங்சிங் ஓம்சிவாயா என்று உச்சரிக்க | தேவ தரிசனம் காணலாம். |
| சங் சிவய நம என்று உச்சரிக்க | விஷ பாதிப்பு நீக்கும். |
| ஓம் துங்சிவாய நம என்று உச்சரிக்க | முத்தொழிலும் சிறக்கும். |
| ஸ்ரீலம்ஹரீம் ஓம் நமசிவாய என்று உச்சரிக்க | பெரியபூமிகள் கொடுக்கும். |
| சிங் நமசிவய என்று உச்சரிக்க | பயிர்களால் நன்மை. |
| வங் சிவய நம என்று உச்சரிக்க | மழை நனைக்காது. |
| சிவாய ஓம்ஸ்ரீ என்று உச்சரிக்க | மழை நிற்கும். |
| கலியுங் சிவாய என்று உச்சரிக்க | வெள்ளம் பெருக்கெடுக்கும். |
| ஓம் கங்சிவ்வுங்சிவய என்று உச்சரிக்க | பெரியகாரியங்கள் வெற்றி. |
| சங்யவ் சி மந என்று உச்சரிக்க | தண்ணீரில் நடக்கலாம். |
| மங் நங் சிங் சிவய என்று உச்சரிக்க | பிசாசு, பேய் சரணம் செய்யும். |

மேற்கண்ட மந்திரங்களுக்குரிய தேவை இருப்பவர்கள், சித்த சுத்தியுடன் தேவையான மந்திரங்களை ஜெபித்து வந்தால் அதற்குரிய பலனை கண்கூடாக அடைவதை கண்கூடாக காணலாம். மேலும் நல்ல எண்ணத்துடன் இதை ஜெபித்தால் பலன் கூடும், தீய எண்ணத்துடன் செய்தால் கண்டிப்பாக தீமையே ஏற்படும்.

www.aanmeegamalar.com

# பஞ்சமுக ஆஞ்சநேயர் உருவான வரலாறு

இராமருக்கும், இராவணனுக்கும் போர் நடந்தது. இதில் இராவணன் நிராயுதபாணியானான்.இதனால் இராமர் இராவணனை கொல்ல னமின்றி,” இன்று போய் நாளை வா’ என திருப்பி அனுப்பி விட்டார்.

இராமர் இவ்வாறு செய்தது தன்னை திருத்துவதற்குத்தான் என்பதை இராவணன் உணரவில்லை. மீண்டும் இராமருடன் போர் செய்ய நினைத்த இராவணன், “மயில் இராவணன்’ என்ற மற்றொரு அசுரனது துணையுடன் போருக்கு கிளம்பினான்.

இராமரை அழிப்பதற்காக மயில் இராவணன் கொடிய யாகத்தை நடத்த திட்டமிட்டான். இந்த யாகம் நடந்தால் இராமலட்சுமணனின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்த விபீஷணன், யாகத்தை தடுத்து நிறுத்த ஆஞ்சநேயரை அனுப் பும்படி இராமரிடம் கூறினான்.

இராமர் கூறியதன் பேரில் ஆஞ்சநேயர் யாகத்தை தடுத்து நிறுத்த கிளம்பும் முன் நரசிம்மர், ஹயக்கிரீவர், வராகர், கருடன், ஆகியோரை வணங்கி ஆசி பெற்றார்.இந்த தெய்வங்கள் அனைவரும் போரில் அனுமன் வெற்றிபெற தங்களின் உருவ வடிவின் சக்தியை அனுமனுக்கு அளித்தனர். இதன்மூலம் ஆஞ்சநேயர் பஞ்சமுகம் கொண்டு விஸ்வரூபம் எடுத்து மனித குல வாழ்விற்காக மயில் இராவணனை அழித்தார்.

இப்படி பஞ்ச முகத்தில் விசேஷ அவதாரம் எடுத்ததால், பக்தர்களின் தீர்க்க முடியாத குறைகளை தீர்த்து வைக்கும் அருளாற்றல் கொண்டவராக “ பஞ்சமுக ஆஞ்சநேயர்’ விளங்குகிறார். அத்துடன் வெற்றியையும் வளத்தையும் குறிக்கும் வகையில் “ஜய மங்களா’ என்றும் அழைக்கப்படுகிறார்.

பஞ்ச முகத்தில் விசேஷ அவதாரம் எடுத்ததால் பஞ்ச முகத்தில் உள்ள ஆஞ்சநேயரை வழி படுபவர்களுக்கு நரசிம்மரின் அருளால் எடுத்த காரியங்களில் வெற்றியும், லட்சுமி கடாட்சமும், ஹயக்கிரீவரின் அருளால் உண்மையான அறிவாற்றல், ஆன்மிக பலமும், வராகரின் அருளால் மனத்துணிவும், கருடனின் அருளால் அனைத்து விதமான நஞ்சின் ஆபத்து விலகும் தன்மையும், ஆஞ்சநேயரின் அருளால் மன அமைதியும், சகல சவுபாக்கியங்களும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.



# சூன்ய திதிகள்



ஒவ்வொரு ராசிக்கும் சில தகாத சூன்ய திதிகள் உண்டு. அந்தந்த ராசிக்காரர்கள் அவர்களுக்கு உரித்தான சூன்ய திதிகளில் திருமணம் / புதுமனை புகுதல், வியாபாரத் துவக்கம் போன்ற எந்த சுப காரியங்களையும் செய்யக்கூடாது.

கோயில் தரிசனம், பூஜை, இறைவழிபாடு களை தாராளமாகச் செய்யலாம்.

| இராசி | அந்த ராசிக்கு சூன்ய திதிகள் |
|---|---|
| மேஷம் | சஷ்டி |
| ரிஷபம் | சதுர்த்தி, திரயோதசி |
| மிதுனம் | பஞ்சமி, அஷ்டமி, சதுர்த்தசி |
| கடகம் | சப்தமி |
| சிம்மம் | திருதியை, சஷ்டி, நவமி, திரயோதசி |
| கன்னி | பஞ்சமி, அஷ்டமி, சதுர்த்தசி |
| துலாம் | பிரதமை, துவாதசி |
| விருச்சிகம் | தசமி |
| தனுசு | துவிதியை, சப்தமி, ஏகாதசி, சதுர்த்தசி |
| மகரம் | பிரதமை, திருதியை, துவாதசி |
| கும்பம் | சதுர்த்தி |
| மீனம் | துவிதியை, ஏகாதசி, சதுர்த்தசி |

சூன்ய திதி நாட்களில் கூட்டாக விஷ்ணு சகஸ்ரநாமம், கால பைரவர் துதி, அபிராமி அந்தாதி, கந்த சஷ்டி கவசம் போன்றவற்றைப் பாராயணம் செய்தால் சூன்ய திதிகளின் தீய விளைவுகளைத் தணிக்கலாம்.

– நன்றி: ஸ்ரீ அகஸ்திய விஜயம்
ஜூன் 1996

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

முறைப்படியான அபிஷேகம்

# நாடும், ஊரும், வீடும் செழிப்படையும்




கோவில் என்றாலே இறை சக்தி நிறைந்த ஒரு இடம் என்று பொருள், அந்த இறை சக்தி முழுவதுமாக கிடைக்கவேண்டுமானால், அந்த கோவிலில் நித்திய கர்மாக்கள் சரியான முறையில் நடைபெறவேண்டும். எந்தெந்த நேரத்தில் எந்த கர்மா சொல்லப்பட்டிருக்கிறதோ அதைச் செய்வது நித்ய கர்மா.

"சந்த்யா வந்தனம், அக்னி ஹோத்ரம்,வேள்விகளை விடாமல் செய்து கடவுள் வழிபாடு செய்வது" இவை மனிதனுக்குரிய நித்யகர்மா. கடவுளுக்கு நித்திய கர்மாக்கள் என்பது மாறுபடும், தினமும் தவறாமல் செய்ய வேண்டிய பூஜை, அபிஷேகம் மந்திர பாராயணம் போன்றவற்றை குறிக்கும்.

இதில் கோவில்களில் உள்ள விக்ரகங்களுக்கு செய்யப்படும் அபிஷேகம் மிக முக்கியமானதாகும்.

நீரை ஜலம் என்பார்கள், அந்த நீரை வைத்து நிகழ்த்தப்படும் மிகப்பெரிய கிரியைதான் அபிஷேகம். இந்த அபிஷேகமானது உலக தட்பவெப்ப நிலையைக் கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது. இதன் காரணமாகத்தான் அக்காலத்தில் அனைத்து அபிஷேகத்தையும் பக்தர்கள் பார்க்குமாறு செய்யமாட்டார்கள். சந்தனாபிஷேகம், விபூதி அபிஷேகம், கலசாபிஷேகம் ஆகியவற்றை மட்டும் பக்தர்கள் பார்க்கும்படி செய்வார்கள்.

மற்ற அபிஷேகங்களைப் பார்க்கக் கூடாதென்பது ஆகம விதி. இவையெல்லாம் ஒவ்வொரு அபிஷேகத்தின்போதும் ஏற்படும் ஆற்றலைக் கணக்கிட்டு விதிக்கப் பட்டவையாக இருக்கலாம்.



அபிஷேகம் செய்யும்போது பெரும் பகுதி அபிஷேகத்தை முன்கூட்டியே செய்து விடுவார்கள் இருப்பினும் பக்தர்கள் திருப்திக்காக அவர்கள் காணும்வண்ணம் கொஞ்ச நேரம் செய்வார்கள்

காளிகாம்பாள் ஆலயத்தில்கூட நண்பகல் அபிஷேகத்தை திரைபோட்டுதான் செய்யப் படு கிறது, மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் நடை பெறும் அபிஷேகத்தையும் திரை போட்டுத்தான் செய்வார்கள், பொதுமக்கள் வி.ஐ.பி. என யாராக இருந்தாலும் காணமுடியாது.

"இல்லது வாராது; உள்ளது மறையாது' என்பதுபோல! அன்றிலிருந்து இன்றுவரை அந்த விதிமுறை பின்பற்றப்படுகிறது. ஆக இந்த வழக்கம் எல்லா இடங்களிலும் இருந்திருக்கும், காலமாற்றத்தால் இன்று பல்வேறு கோவில்களில் அபிஷேகத்தை திரையிடாமல் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

அதேபோன்று, சிவலிங்கத்துக்கு அபிஷே கம் செய்யும் போது அதன்மேல்பகுதி யிலிருந்துதான் செய்ய வேண்டும். பாணத்தின் உச்சியில் வட்ட மாகக் கட்டப்பட்ட பூக்களை வைத்துதான் அபிஷேகம் செய்யவேண்டும் எந்த வகை மலரால் வேண்டுமானாலும் வளையம் அமைக்கலாம்.


கீதா–ராஜன்

அதை சுவாமியின் சிரசில்வைத்து அபிஷேகம் செய்தால் கீழே விழாது. இந்த வளையத்துக்கு இண்டம் என்று பெயர். மற்றதெய்வங்க ளுக்கு அபிஷேகம் செய்யும்போதும் சிரசில் இண்டம் எனப்படும் மலர் வளையத்தை வைக்கவேண்டும். அபிஷேகத் தின்போதுதான் என்றல்ல.

எப்போதும் இண்டம் வைக்கலாம். சிவலிங்கத் தை வெறுமனே காணக்கூடாது. அதன் உச்சியில் ஒரு சிறு மலரையாவது எப்போதும் வைத்திருக்கவேண்டும். அதன் மேல் பகுதிக்கு ஈசான முகம் என்று பெயர்.

ஈசனின் மற்ற நான்கு முகங்களான சத்யோஜா தம், வாமதேவம், தத்புருஷம், அகோரம் ஆகியவை மற்ற நான்கு திசைகளையும் குறிக்கின்றன. முருகப்பெருமானை ஈசன் தோற்றுவிக்கும்போது அதோமுகம் என்னும் ஆறாவது முகத்துடன் இருந்தார் என்பர்.

இந்த முகம் கீழே உள்ளது. கீழே என்றால் கீழ்நோக்கிய பார்வை என்பதல்ல; உள்ளே சென்று பார்க்கக்கூடியது. முருகனுக்குரியதாக இது சொல்லப்படுகிறது. குறி சொல்கிறவர்கள், அருள்வாக்கு சொல்பவர்களையெல்லாம் பாருங்கள். அவர்கள் முருக உபாசகர்களாக இருப்பார்கள். முருகனை உபாசிக்க உபாசிக்க, ஒருவரின் உள்ளிருக்கும் ரகசியங்களை அறியும் ஆற்றல் உருவாகும்.

ஆக, சிவலிங்கத்தின் ஈசான முகத்துக்கு தான் அபிஷேகம் செய்யவேண்டும். பாணத்துக் குக் கீழுள்ள கோமுகியுடன் கூடிய அகன்ற பகுதியை ஆவுடையார் என்பர். (இந்த கோமுகி வடக்கு அல்லது கிழக்கு பார்த்துதான் இருக்க வேண்டும்.) "ஆ' என்றால் பசு.

அதாவது ஜீவாத்மாக்கள். இவையெல்லாம் இந்த ஆவுடையாருக்குள்தான் இருக்கின்றன. இங்கிருந்துதான் அனைத்துயிர்களும் வெளிப்படு கின்றன. இது அம்பாள் பாகம் எனப்படுவதால், கண்டிப்பாக இதன்மீது ஆடை சாத்தித்தான் அபிஷேகம் செய்யவேண்டும்.

அதன் கீழ்ப்பாகம் பிரம்மபாகம் எனவும், நடுப்பகுதி விஷ்ணு பாகம் எனவும், மேல்பகுதி ருத்ர பாகம் எனவும் அழைக்கப்படுகிறது.

இவ்வளவு ஆற்றல்களும் அடங் கிய சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்யும் போது, நமக்குள்ள தீய எண்ணங்கள், கோபம், ஆவேசம், வளர்ச்சி யின்மை போன்றவை யெல்லாம் அகற்றப் பட்டு மலர்ச்சி யுடையவர்களாகிறோம்.

எல்லா ஜீவராசிகளுக்கும் இதன் பயன் சென்று சேர்கிறது. அவ்வாறு ஒரு மாறுதலை ஏற்படுத்தக்கூடிய ஒரு கிரியைதான் அபிஷேகம்.

முதலில் சுவாமிக்கு

எண்ணெய்க் காப்பு சார்த்துவார்கள். நமக்கு சிறு வயதில் தலையில் நன்றாக எண்ணெய் தேய்த்துவிடுவார்கள். அது நம் உடலிலுள்ள வெப்பத்தைப் போக்கி குளிர்ச்சியை உண்டாக்கும். அதுபோலவே செய் யப்படுவதுதான் இதுவும்.

தெய்வ சந்நிதியில் சுற்றிலும் விளக்குகள் உள்ளன. நாமும் செல்கிறோம். அதனால் ஏற்படும் வெப்பம் தெய்வத் திருமேனியில் தங்கும். அதைப் போக்கவே எண்ணெய்க் காப்பு. சாற்றும்போது நன்றாக தலையில் தேய்த்துவிட வேண்டும்.

அது கல் அல்ல; சாட்சாத் சுவாமிதான். கை, கால்களைப் பிடித்து உபசாரம் செய்யவேண்டு மென்று சாஸ்திரத்திலே சொல்லப்பட்டுள்ளது. வஸ்திரம் சாற்றித்தான் அபிஷேகம் செய்ய வேண்டும். பிறகு இதற்கென உள்ள பொடி வகைகளைக் கொண்டு நன்றாகத் தேய்த்து விட வேண்டும். பிறகு பால், தயிர், பழரசம் போன்றவற்றைக்கொண்டு அபிஷேகம் செய்ய வேண்டும். இந்த செயல்களை யெல்லாம் பய பக்தியோடு செய்யவேண்டும். இப்படி செய்யப் படும் அபிஷேகத்தால் அனைத்து உலகுக்கும் நன்மைகள் ஏற்படும்.

ஒவ்வொரு அபிஷேகத்துக்கும் தனித் தனியான பலன்களும் உள்ளன. ருத்ராபிஷேகம் செய்தால் மனஅமைதி கிட்டும். அனைத்து கவலைகளும் அகலும். அதனால்தான் ஆலயங்களுக்குச் செல்லவேண்டுமென்கிறோம்.

வீடுகளில் இவற்றையெல்லாம் முறையாக செய்யமுடியாது. ஆலயத்துக்குச் சென்றால் அனைத்தும் முறைப்படி இருக்கும்.

இவ்வாறு அபிஷேகம் செய்யும்போது அதன்சக்தி உடனே எல்லா இடங்களுக்கும் பரவுகிறது. தொடர்ந்து செய்யச் செய்ய அனைத்து மக்களுக் கும் அந்த சக்தியானது சென்றுசேர்கிறது.

அதே போன்று இறைவனுக்கு எவ்வளவுஅபி ஷேகம் செய்கிறோமோ, அந்த அளவுக்கு சுவாமிக்கு நிவேதனங்களைப் படைக்கவேண்டும்.

சுவாமிக்கு நூறு படி பாலில் அபிஷேகம் செய்துவிட்டு இரண்டு வாழைப்பழங்களை நிவே தனம் செய்யலாமா? நூறு படி அபிஷேகம் செய்தால் ஐம்பது படியாவது நிவேதனமாகப் படைக்கவேண்டும். நாம் இரண்டு லிட்டர் பால் கொடுக்கிறோமென்றால் ஒரு லிட்டரை அபிஷேகத்துக்குப் பயன்படுத்தி விட்டு ஒரு லிட்டர் பாலை நிவேதனம் செய்து விடு விடுவார்கள். "நைவேத்யம் க்ஷீ னே துர் பிட்சம்" என்பார்கள். இதன் முழு விளக்கம், **நிவேதனம் குறையக்குறைய வளர்ச்சி குறையும் இது நாட்டுக்கு நல்லதல்ல என்பது பொருள்.**

அதேப் போன்று நிறைய அபிஷேகம் செய்து நிறைய நிவேதனம் செய்தால் பெரிய அளவு வளர்ச்சி ஏற்படுமல்லவா என்று நினைக்கத் தோன்றும். எதற்குமே ஒரு வரையறை உள்ளது. அபிஷேகம் செய்ய 24 நிமிடங்கள் என்று கணக்குள்ளது. அதற்குமேல் செய்யக்கூடாது. அந்த 24 நிமிடங்களுக்குள் எல்லா அபிஷேகங் களையும் முடித்துவிட வேண்டும்.

(பிரம்மோற்சவம் போன்ற சிறப்பு தினங்களில் செய்யப்படுவது வேறு.) அபிஷேகப் பொருட்கள் அதிகமாக இருந்தால் காலை பூஜை, நண்பகல் பூஜை, மாலைநேர பூஜையென காலங்களைப் பிரித் துக்கொண்டு செய்வார்கள். சுவாமி மீது ஆடையும் பூக்களும் இருக்கவேண்டியது அவசியம்.

இவ்வாறு **எல்லாவற்றையும் முறையாகச் செய்தால்தான் அந்த ஆலயத்தில் சாந் நித்யம் நிறைந்திருக்கும். பக்தர்களின் கோரிக்கைகள் நிறைவேறும். நாட்டிலும் செழிப்பும் நிம்மதியும் நிலவும்.**

ஒரு சிலை வடிக்கப்படுகிறது. அது பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆலயம் அமைக்கப்படுகிறது. அத்துடன் வேலை முடிந்துவிடுவதில்லை.

சரியாக பராமரிக்கப்பட வேண்டியது அவசி யம். இல்லையென்றால் அதன் முழு சக்தி நமக்கு கிடைக்காது. அபிஷேகம் முடிந்ததும் தூய்மை யான ஆடையால் நன்றாகத் துடைத்துவிட வேண்டும். பின்னர் சுவாமிக்கு வேறு ஆடை சாற்றவேண்டும். இதற்காகத்தான் மன்னர்கள் காலத்தில் ஒவ்வொரு கோவிலுக்கும், ஆடு, மாடு, நிலம், போன்றவற்றை உயில் எழுதி வைத்து, அந்த சொத்துக்களின் மூலம் கிடைக்கும் வருவாயின் மூலம் அக்கோவிலினை நிர்வகிக்க ஒரு தர்மகர்த்தாவை நியமித்தனர்.

சுவாமிக்கான வஸ்திரம் இருக்கிறதா, மலர்கள் இருக்கின்றனவா, இண்டம் இருக்கிறதா, நிவேதனப் பொருட்கள் என்ன இருக்கின்றன அதை எந்த முறையில் பயன்படுத்துவது உள்ளிட்ட எல்லா விஷயங்களையும் கவனிக்கும் பணியை தர்மகர்த்தாவே செய்வார்.

**அதேப்போன்று அபிஷேகம் சாஸ் திரப்படி செய்யும்போது ஊரும், ஊர் மக்களும், அந்த ஊர் அமைந்த நாடும் மிகச் செழிப்படையும். நல்லோர் பெருகு வார்கள், ஒழுக்கமும் நேர்மையும் நிலை பெறுகிறது அற்புதங்கள் பல அங்கே அரங்கேறுகின்றன.**

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

தெரியாத, புரியாத,
ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக தொகுத்து
பாமரர்களும் புரிந்து கொள்ளும்
வகையில் நமது இதழில்
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த
140 க்கும் மேற்பட்ட
இதழ்களை
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.





# சோமன், கந்தர்வன், அக்னி பாதுகாப்பில் வளரும் பெண்களும்

# மாங்கல்யதாரணமும்

இந்து மதத்தில் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படும், அந்த வகையில் ஒரு பெண்ணை பிறப்பிலிருந்து வாழ்நாள் முழுவதும் நான்கு பேர் பாதுகாப்பதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அதாவது, சோமன் முதலிலும், கந்தர்வன் இரண்டாவதாகவும், அக்னி மூன்றாவதாகவும் அந்தப் பெண்ணை பாதுகாப்பான் நான்காவதாக மனிதன் அப்பெண்ணை திருமணம் செய்துகொண்டு வாழ்நாள் கடைசிவரை அப்பெண்ணை பாதுகாப்பதாக கூறப்படுகிறது.

இதைத்தான் திருமணத்தின் போது சொல்லப்படும் மந்திரத்தின் விரிவான உரையாகும்.

இதை ஒருசிலர் பகுத்தரிவு என்ற போர்வையில், திரித்து கூறி கேலி கிண்டல் செய்தாலும், அந்த மடையர்களின் புத்தி அவ்வளவுதான் என்று கடந்து போவதுதான் நன்மை தருமே தவிர, குறைக்கும் நாயுடன் சேர்ந்து குறைப்பது அறிவிலித்தனம் என்று கருதுவதால், பலர் விதண்டாவாதத்தை கண்டுக்கொள்ளாமல் விட்டுவிடுகின்றனர்.

உண்மையில் திருமணத்தின் போது கூறப்படும் மாங்கல்யதாரணத்தின் விளக்கத்தை விரிவாக பார்ப்போம். முதலில் திருமணத்தின் போது, திருமாங்கல்யம் அணிவித்து சொல்லும் மந்திரமும் அந்த மந்திரத்திற்கான விளக்கமும் பார்ப்போம்

மாங்கல்யம் தந்துநாநேந மம
ஜீவித ஹேதுநா கண்டே பத்நாமி
ஸூபகே ஸஜீவ ஸரதஸ்ஸதம்

இது மணமகன் சார்பாக சொல்வதாக அமைந்த மந்திரம்

மந்திரத்தை திருமணம் செய்துவைப்பவர் எடுத்துக்கூற மணமகனும் திரும்பகூறி அக்கினி சாட்சியாக மணமகளை ஏற்றுக்கொள்ள வேண்டும், இந்த வைபவத்தை திருமாங்கல்யதாரணம் என்பர்.

இதன் பொருள்,

உன்னோடு நான் நீடுழி வாழ வேண்டி இந்த மங்கல நாணை உன் அழகிய கழுத்தில் அணிவிக்கிறேன், எல்லாப் பேறுகளும் பெற்று நீ நூறாண்டு நிறைவான வாழ்க்கை வாழ இறைவன்

அருள் புரியட்டும் என்பதாகும்.

அதன் பிறகு சொல்லும் மந்திரத்தில்
ஸோம ப்ரதமோ விவிதே
கந்தர்வ விவிதா: உத்ட்ராஹ
த்ரியோ அஹ்னித்தெபிதீஹ
துரியஷ்டெமனுஷ்யஜஹ
ஷோம ததத் கந்தர்வ கந்தர்வ தத்தயன
யே ரயின்ஷப்பூதரம் ஸ்காதத்
அக்னிர்மஹைமதோ இமாம்

– என்று ஒரு மந்தர பிரயோகம் வரும், இதன் பொருள் என்னவென்றால்...

ஹே பெண்ணே முதலில் சோமன் (சந்திரன்) உன்னை பாதுகாத்தான், பின் கந்தர்வன் உன்னை பாதுகாத்தான், மூன்றாவதாக அக்னி உன்னை பாதுகாத்தான், நான்காவதாக மனிதனாகிய நான் உன் பாதுகாவலன் ஆகிறேன் என்பதாகும்.

இதன் உட்பொருள், ஒரு பெண் குழந்தை பிறந்து தானாக ஆடைகளை அணியும் பருவம் (4–5 வயது) வரை சந்திர ஒளியின் மென்மை குளிர்மையை ஒத்த குணங்களை பெற்று வளர்கிறது. ஆகவே இப்பருவம் சந்திரனின் ஆதிக்கத்தின் (பாதுகாப்பில்) கீழ் இருக்கும் பருவம் எனப்படுகிறது.

கந்தர்வன் என்பது இசைக்கும் கேளிக்கைக்கும் அழகியலுக்கும் அதிபதியாக சொல்லப்படும் தேவதை.

ஒரு பெண்குழந்தையின் 5–11 வயது காலம் என்பது குறும்பும் அழகும் நிரம்பி வழிய கள்ளம் கபடம் இல்லாமல் துள்ளி திரியும் காலம் ஆகவே இது கந்தர்வனின் ஆதிக்கத்தில் (பாதுகாவலில்) இருக்கும் பருவம் எனப்படுகிறது.

அதன் பின் 11–16 வயது பருவ காலம் உடலில் ஹோர்மோன்களின்மாற்றத்தால் உடலமைப்பு மெல்ல மாற உஷ்ண அழுத்த மாற்றங்கள் ஏற்பட்டு பூப்படையும் பருவம் காமவெப்பம் மெல்ல உடலில் தொற்றிக்கொள்ளும் மங்கை பருவம் ஆகவே இது அக்னி (சூடு வெப்பம்காங்கை) யின் ஆதிக்கத்தின் (பாதுகாவலில்) கீழ் வரும் பருவம் எனப்படுகிறது.

இப்படி ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு தேவதைகளின் அருளால் பெண்மைக்குரிய அம்சங் களை எல்லாம் அழகுற பெற்று இன்று என்முன்னால் மங்கையாய் அமர்ந்திருக்கும் உனக்கு, குறைவிலா நலமே தர இப்போது




மானிடன் ஆகிய நான் அக்னி சாட்சியாக உன் பாதுகாவலனாகிறேன் நம் உறவை மீண்டும் இந்த அக்னியை தவிர யாரும் பிரிக்க முடியாது.

அதாவது இந்த கால விவாகரத்து என்பது நாமே வகுத்த சட்டத்தில் தான் செல்லுபடியாகும் ஆனால் திருமணபந்தம் மந்ரம் நம் மணமகன் மணமகள் உறவை அந்திமகால மாயான அக்னி மட்டுமே இந்த ஜன்மத்தில் பிரிக்கும் என்கிறது, இது தான் இந்த வேதமந்திரத்தின் உட்பொருள்.

# எங்கள் சேவைக்கு உதவுங்கள்...

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக
ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்–ஆப்,
இ–புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி
அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக
வெளியிட்டு வருகிறோம்.

## இதுவரை 140 இதழ்களை கடந்துள்ளோம்.

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த
பொருளாதார உதவி தேவைப்படுகிறது.
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட
வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.

**ஆன்மிகமலர் டிரஸ்ட்**
Tamilnadu Government Redg.304/2016

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

மேலும் விவரங்களுக்கு 09444228203
எண்ணில் தொடர்பு கொள்ளவும்



# 2022 ஜூலை மாத
# இராசி பலன்கள்






பொறுமை தேவைப்படும் மாதம் இது, உங்களை தொந்தரவு செய்பவர்களிடம் இருந்து விலகியே இருப்பதும், கோபத்தை குறைப்பதுநன்மை தரும். புதிய விஷயங்களை நிறைய கற்றுக்கொள் வீர்கள். குடும்ப பொறுப்பை முன்னின்று ஏற்று செய்வீர்கள். சில விஷயங்கள் உங்கள் மனதைக் காயப்படுத்து வதாக இருக்கும். எதிலும் உங்களின் கடின முயற்சியை மேற்கொண்டு வெற்றி அடைந்திட முடியும். வழக்கு தொடர்பான விஷயத்தில் சாதகப் பலன் கிடைக்கும். தீர்ப்புகள் உங்கள் வசப்படும். பொருளாதார ரீதியான முன்னேற்றம் படிப்படியாக உயரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிரடி மாற்றங்கள் ஏற்படலாம். பெண்களுக்கு சுய முடிவுகள் லாபத்தை கொடுக்கும். மாண வர்களின் கல்வியில் முன்னேற்றம் தெரியும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பரிகாரத் திற்கு இஷ்ட தெய்வத்திற்கு நெய் தீபம் ஏற்றி வழிபட்டு வாருங்கள் நன்மைகள் நடக்கும்.




ரிஷப ராசியில் சுக்கிரனின் சஞ்சாரம் செய்வதால் நண்பர்களின் அரவணைப்பும் நட்பு வட்டாரமும் அதிகரிக்கும். சில நேரங்களில் அலைச்சல்கள் அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், நிம்மதியும் இருக்கும். எந்த தொழில் செய்தாலும் அதில் நல்ல லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. செலவுகள் வந்தாலும் அது சுபச் செலவுகளாக இருக்கும் எனவே கவலை கொள்ள தேவையில்லை. சுய தொழிலில் உள்ளவர்களுக்கு வியாபார போட்டி ஏற்படும், போட்டி ஏற்பட்டாலும் நல்ல பலன்கள் கிடைக்கும், பலன்கள் சற்று தாமதமாகக் கிடைக்க வாய்ப்புள்ளது. உத்தியோகஸ்தர்களுக்கு சொத்து ரீதியான பிரச்சனைகள் ஒரு வழியாக முடிவுக்கு வர இருக்கிறது. மேல் அதிகாரிகளின் ஆதரவை பெறுவது நல்லது. பொருளாதார ரீதியான

ஏற்ற இறக்கங்களை திறம்பட சமாளிப்பீர்கள். பெண்களுக்கு வைராக்கியம் பிறக்கும். மாணவர்கள் தேவையற்ற பொழுதுபோக்குகளை தவிர்ப்பது நல்லது. ஆரோக்கியத்தில் முன்னேற்றம் இருக்கும். பரிகாரமாக ஏழை மாணவர்களுக்கு நோட்டு, புத்தக தானம் செய்து வாருங்கள் நல்லது நடக்கும்.




இந்த மாதம் சாதக பாதக மாதம் என்றே சொல்லலாம், இந்த மாதம் ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகிறது எனவே எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்ளுங்கள். கிரகங்கள் வக்ரம் அடையும் பொழுது தடை தாமதங்கள் ஏற்படும் எனவே உணர்ச்சிவசப்படாமல் எதையும் நிதானமாக கையாளுவது நல்லது. ஆக்கப்பூர்வமான விஷயங்களில் ஈடுபடுவீர்கள். உங்கள் ராசியிலேயே ராசி நாதன் புதன் சஞ்சாரம் செய்ய உள்ளது. உங்களின் மன கஷ்டம், சஞ்சலம் தீரும். மாதம் ஒரு பகுதியில் மன அமைதி சீர்குலையும் எனவே கோபத்தை தவிர்த்து பொறுமையுடன் இருப்பது நல்லது. பொறுமையை கடைபிடித்தால் உங்களின் மதிப்பு உயர்வதுடன், நீங்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளும் வெற்றி கிடைக்க வாய்ப்புள்ளது. சுய தொழிலில் உள்ளவர்கள் மற்றவர்களை நம்பி எந்த ஒரு முக்கிய விஷயங்களையும் ஒப்படைக்கக் கூடாது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் உங்களுடைய திறமைகளை நிரூபித்து காட்டக்கூடிய வாய்ப்புகளை பெறுவீர்கள். பெண்களுக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம் வரக்கூடும். பொருளாதாரம் ஏற்ற இறக்கத்துடன் காணப்படும். தேவையற்ற செலவுகளை குறைத்துக் கொள்ளுங்கள். உடல் நலனில் அக்கறை தேவை. பரிகாரமாக வயதானவர்களுக்கு உணவு பொட்டலங்கள் அவ்வபோது வாங்கி கொடுங்கள் நல்லது நடக்கும்.




ராசி நாதன் சந்திரன் ஜென்ம ராசியில் இருப்பதால் மிக சிறப்பான பலனைத் தருவதாக இருக்கும். நினைத்ததை நினைத்தபடி அடைவீர்கள். உங்களை சுற்றி இருப்பவர்களுக்கு பிடித்தமானவராக மாறுவீர்கள். எந்த ஒரு விஷயத்திலும் உணர்ச்சிவசப்படாமல் புதிய அத்தியாயத்தைத் தொடங்க இந்த மாதம் உங்களுக்கு தைரியத்தைத் தரும். அதனால் எதிலும் ஒரு பெரிய மாற்றம் சாத்தியமாகும். தனிப்பட்ட



குடும்ப வாழ்க்கை மற்றும் வேலை, தொழில் தொடர்பான எந்த ஒரு சூழ்நிலையிலும் சில கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியதாக இருக்கும். எதிலும் நேர்மையாக நடந்து கொள்வதால் உங்களின் கௌரவம் அதிகரிக்கும். தலை நிமிர்ந்து நடப்பீர்கள். சுய தொழிலில் உள்ளவர்களுக்கு அனுபவத்தின் மூலம் பல அனுகூலமான பலன்கள் கிடைக்கும். வியாபார விருத்தி உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பாராத வகையில் பதவி உயர்வு கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் அமையும். பெண்களுக்கு மகிழ்ச்சி நிறைந்த மாதமாக இருக்கிறது. மாணவர்களின் கல்வி விஷயத்தில் பெற்றோர்கள் அக்கறை கொள்ளுதல் நலம் தரும். ஆரோக்கியத்தில் முன்னேற்றம் இருக்கும். பரிகாரமாக கந்த குரு கவசம் படிப்பது நல்லது, தன்னம்பிக்கை வளரும்.




சிறிய முயற்சிக்கே எளிதாக வெற்றி கிடைக்கும் மாதமாகும், குடும்பம், பணியிடம் என எதுவாக இருந்தாலும் உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி உங்களின்

திறன், செயலை மேம்படுத்துவதற்கான வழிகளை தேடுவது நல்லது. எந்த ஒரு விஷயத்திலும் புதிய நோக்கத்துடன் உங்கள் வாழ்க்கையை அணுகுவீர்கள். இந்த மாதம் எதிலும் வெற்றி அடையக்கூடிய வாய்ப்புகளை பெற போகிறீர்கள். இதுவரை இருந்து வந்த குழப்பங்கள் தீர்ந்து தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். சுய தொழிலில் உள்ளவர்கள் மனதில் பட்டதை பேசி விடுவது நல்லது. முக்கிய விஷயங்களை தாமதப்படுத்தினால் ஆபத்துக்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தேவையற்ற வீண் பணிகள் சுமக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும் என்பதால் விழிப்புணர்வுடன் செயலாற்றுவது நல்லது.மாணவர்களின் எதிர்காலம் சிறப்பாக இருக்க செய்ய கூடிய அமைப்பாக இருக்கிறது. பெண்களுக்கு பொன், பொருள் சேரும். சுவாசம் தொடர்பான பிரச்சனைகள் வரக்கூடும் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ளுங்கள். பரிகாரமாக மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி புரியுங்கள் நல்லது நடக்கும்.




செவ்வாயின் அமைப்பு உங்களுக்கு சதகமானதாக இருக்கும். எந்த வேலையை செய்து முடிப்பதற்கான வலிமை தரும். உங்கள் ராசி நாதன் 10ம் இடமான கர்ம ஸ்தானத்தில் இருப்பது விசேஷமானது. உங்களின் எந்த ஒரு முயற்சிகளும், வேலைகளும் சிறப்பாக முடிக்கவும், அதில் நல்ல பலனும் கிடைக்கும். இருப்பினும் ஆரோக்கியத்தில் கவனமாக இருப்பதோடு, வாகன பயணத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் இருக்கும் மற்றவர்களை அனுசரித்து செல்லுங்கள். எடுத்தோம் கவிழ்த்தோம் என்று எந்த ஒரு முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டாம். சுய தொழிலில் உள்ளவர்களுக்கு பண விஷயத்தில் அக்கறை தேவை. உத்தியோகத்தில் உள்ளவர்கள் அனுபவம் உள்ளவர்களிடம் ஆலோசனை கேட்டு முடிவுகளை எடுப்பது நல்லது. பெண்களுக்கு மன சோர்வு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு என்பதால் இறை வழிபாட்டின் மீது ஆர்வம் செலுத்துங்கள். மாணவர்களுக்கு படிப்பின் மீது ஆர்வம் அதிகரித்து காணப்படும். பரிகாரம்: விஷ்ணு சகஸ்ரநாமம் சனிக்கிழமைகளில் படியுங்கள், மனோதிடம் கூடும்.

பணியில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. இந்த மாதம் நீங்கள் அற்புதமான பலன்களை பெற




போகிறீர்கள். உங்களால் மீளவே முடியாது என்று நினைத்துக் கொண்டிருந்த ஒரு விஷயத்திலிருந்து தன்னம்பிக்கையுடன் மீள்வீர்கள். எவ்வளவு தடைகள் ஏற்பட்டாலும் அதிலிருந்து மனம் தளர்ந்து போகாமல், பின் வாங்காமல் இருப்பது நல்லது. சுய தொழிலில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத வகையிலான லாபங்கள் வரக்கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் அதிகரிக்கும் என்பதால் சில தியாகங்களை செய்ய வேண்டி இருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் விரும்பிய முன்னேற்றம் மற்றும் நன்மைகளைப் பெறுவீர்கள். வீடு, நிலம் வாங்கும் விஷயங்களில் கவனமாக செயல்படுவது நல்லது. ஆரோக்கியத்தைப் பொறுத்தவரைச் சிறப்பாக இருக்கும். பெண்களுக்கு மன வலிமை கூடும். மாணவர்கள் விடா முயற்சியுடன் பயணிப்பீர்கள். பொருளாதார ரீதியான விஷயத்தில் ஏற்றம் குறையாமல் காணப்படும்.

பரிகாரம் மருத்துவ உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவுவது நல்ல பலனை தரும்.




மாதத்தின் முதல் பாதியில், சூரியன் மற்றும் புதன் மிதுன ராசியில் சஞ்சரிப்பதால் சில தொல்லைகளையும் கவலைகளையும் சந்திக்க வேண்டியது இருக்கும். குடும்ப பிரச்சனைகளை தீர்ப்பதில் கவனம் தேவை. நீங்கள் தொட்டதெல்லாம் துலங்கும். சுபகாரிய பேச்சு வார்த்தைகளில் வெற்றி கிடைக்கும். தொலைதூர பயணங்களை கூடுமானவரை தவிர்த்து விடுங்கள். எதிர்பார்த்த சுப செய்தி கிடைக்கும் யோகம் உண்டு. சுய தொழிலில் உள்ளவர்களுக்கு எதிர்பார்ப்புகள் பூர்த்தி அடையும். எந்த ஒரு வேலையையும் சுறுசுறுப்பாக இருந்து செயல்பட நல்ல பலன் கிடைக்கும். ஜூலை இரண்டாவது வாரத்தில், பணம் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களில் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். பெண்களுக்கு புது பொலிவு உண்டாகும். மாணவர்கள் எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பொருளாதாரத்தில் ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகிறது. நரம்பு தொடர்பான பிரச்சனைகள் வரக்கூடும் என்பதால் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். பரிகாரமாக காலை

மாலை இருவேளையும் வீட்டில் விளக்கேற்றி வையுங்கள் நல்லது நடக்கும்.




உங்கள் குழப்பங்கள் தீரும் மாதமாக இருக்கிறது. இதுவரை தடைகளை சந்தித்துக் கொண்டிருந்த நீங்கள் இனி வெற்றி நடை போட இருக்கிறீர்கள். சுய தொழிலில் உள்ளவர்களுக்கு கிரக பார்வை சிறப்பாக இருப்பதால் நினைத்த ஒப்பந்தங்களை பெறுவீர்கள். மாதத்தின் முதல் பாதியில் நேரத்தையும் சக்தியையும் நிர்வகித்துச் சிறப்பாக செயல்பட்டால் ஒவ்வொரு துறையிலும் அவர்கள் விரும்பிய வெற்றியைப் பெற்றிட முடியும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் மாறும். புதிய தொழில் துவங்கும் எண்ணத்தில் இருப்பவர்களுக்கு அனுகூல பலன் உண்டு. பெண்களுக்கு அதிக உணர்ச்சிவசப்படக் கூடிய மாதம் என்பதால் நிதானம் தேவை. மாணவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய விடா முயற்சி தேவை. ஆரோக்கியத்தில் அடிக்கடி தொந்தரவுகள் ஏற்படும் என்பதால் கூடுதல் அக்கறை செலுத்துங்கள்.

பரிகாரமாக செவ்வாய்க்கிழமையில் துர்க்கை அம்மனை வழிபட்டு வாருங்கள் நன்மைகள் நடக்கும்.




வார்த்தைகளை கவனமாக பயன்படுத்துவது நல்லது. எந்த ஒரு சூழ்நிலையிலும் உங்களின் வார்த்தைகள் உங்களின் வாழ்க்கையில் பெரிய மாற்றம் ஏற்படுத்த வாய்ப்புள்ளது இந்த மாதம் ஏற்ற இறக்கான மாதமாகச் செல்லும். உங்கள் குடும்ப விஷயங்களை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். குடும்பத்தின் அன்பு கிடைக்கும் என்றாலும், மாதத்தின் பிற்பாதியில் தொழில்வியாபாரம் தொடர்பாக மேற்கொள்ளும் பயணங்கள் சோர்வாகவும், ஏமாற்றமாகவும் இருக்கும். இந்த நேரத்தில், புத்துணர்ச்சியுடன் எந்த ஒரு சவாலை எதிர்கொண்டாலும் அதில் நல்ல வெற்றி கிடைக்கும். புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பெண்களுக்கு ஆடை ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மகிழ்ச்சியான சம்பவங்கள் கூடுதல் உற்சாகத்தை கொடுக்கும். மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் அக்கறை தேவை. பரிகாரமாக திருவாசக பாடல்களை பாடி மனதை பக்தியுடன் வைத்திருப்பது நல்லது.




**கும்பம்:** மாதத்தின் முதல் பாதி எதிர்பார்த்த வெற்றியையும் புதிய வாய்ப்புகளையும் தரும். நினைத்த காரியம் குறித்த நேரத்தில் நிறைவேறும். இதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். வீட்டில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். சுய தொழிலில் உள்ளவர்களுக்கு திடீர் பயணங்கள் அனுகூல பலன் கொடுக்கும். புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சியில் கவனம் தேவை. இதுவரை வசூல் ஆகாத பழைய கடன்கள் வசூல் ஆகும். பணத்தை முதலீடு செய்யும் போது நிபுணர்கள் அல்லது நலம் விரும்பிகளின் ஆலோசனையைப் பெறுவது நல்லது. பெண்களுக்கு குடும்பத்தின் மீதான அக்கறை அதிகரித்து காணப்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் பணியில் கூடுதல் பொறுப்புணர்வுடன் செயலாற்றுவது நல்லது. இந்த நேரம் உங்கள் தொழில் மற்றும் வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு மிகவும் சாதகமாக இருக்கும். மாணவர்கள் பாடத்தில் கவனம் செலுத்த வேண்டும். ஆரோக்கியத்தில் படிப்படியான முன்னேற்றம் இருக்கும். பரிகாரமாக ஆஞ்சநேயருக்கு சனிக்கிழமை வெண்ணெய் சாற்றுங்கள், நன்மைகள் நடக்கும்.




கிரக அமைப்புகள்சிறப்பாக அமைய பெற்றுள்ளதால் இந்த மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டம் நிறைந்த மாதமாக இருக்கிறது. இதுவரை கிடப்பில் போடப்பட்ட வேலைகள் விறுவிறுவென நடக்க ஆரம்பிக்கும். வீடு வாகனம் வாங்க கூடிய வாய்ப்புகளை பெறுவீர்கள். மாதத் தொடக்கத்தில் குழந்தைகள் தொடர்பாகவும், குடும்பத்திலும் மகிழ்ச்சியான சூழல் நிலவும். வீட்டில் மங்கள காரியங்கள் நடக்கும். குடும்பத்துடன் ஆன்மிக வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்ல வாய்ப்பு கிடைக்கும். மாதத்தின் கடைசி வாரத்தில், பணியிடத்தில் சில சிரமங்கள் ஏற்படலாம். இந்த காலகட்டத்தில் பணம் தொடர்பான பிரச்சனைகளும் உங்கள் கவலைகளுக்கு ஒரு காரணமாக இருக்கலாம். எதையும் ஒரு முறைக்கு பலமுறை சிந்தித்து முடிவெடுங்கள். பெண்களுக்கு பொறுமை தேவை. பொறுத்தவர்கள் பூமி ஆளலாம். மாணவர்கள் பணிவு, ஒழுக்கத்துடன் நடந்து கொள்வது நல்லது. தேவையற்ற வம்பு வழக்குகளில் சிக்கிக் கொள்வதற்கு வாய்ப்புகள் உண்டு என்பதால் விழிப்புணர்வு தேவை. பரிகாரமாக சாலையோர வாசிகளுக்கு இயன்ற உதவிகளை

# பிரதக்ஷணம் – பரிக்ரமம்

கடவுளை தேடி கோவிலுக்கு செல்கிற போது, அங்கே நாம் செய்யக்கூடிய பிரத்யேமான செயல்கள் சில உண்டு. அதில் ஒன்று தான் கோவிலை சுற்றி வருவது.

கோவிலை சுற்றி வருவதற்கு இரு வார்த்தைகள் சொல்வது வழக்கம் பிரதக்ஷணம் மற்றும் பரிக்ரமம். இரண்டும் ஒன்றா என்றால் இல்லை. இரண்டுக்கும் வேறுபாடு உண்டு.

பரிக்ரமம் என்பது இயற்கையை சுற்றி வருவது. உதாரணமாக, மலையை சுற்றுவது, யாக குண்டம், நெருப்பு ஆகியவற்றை சுற்றுவது, துளசி செடியை சுற்றி வருவது போன்ற இயற்கை அம்சங்களை சுற்றி வருவது பரிக்ரமம் என்று அழைக்கப்படுகிறது.

இறைவன் இருக்கின்ற இடத்தை சுற்றி வருவது பிரதக்ஷணம் ஆகும். இவ்வாறு செய்வதற்கு ஆழமான ஆன்மீக மற்றும் அறிவியல் காரணங்கள் உண்டு.

பிரதக்ஷணம் எனும் வார்த்தைக்கு ஆழமான அர்த்தம் உண்டு. பிர எனும் ஒலிக்கு பயத்தை நீக்குதல் என்று பொருள். த எனும் ஒலிக்கு முக்தியை அருள்வது என்று பொருள்.

க்ஷ எனும் ஒலிக்கு சர்வ வியாதி நிவாரணம் என்று பொருள் நம் எனும் ஒலிக்கு செல்வ வளம் என்று பொருள்

பிரதக்ஷணம் என்பதற்கு வலது புறமாக செல்வது என்று பொருள். எனவே கோவில் பிரதக்ஷணம் எப்போதும் இடது புறமாக ஆரம்பித்து வலது புறமாக முடிப்பதாகும்.

மூன்று முதல் நேர்த்திகடனுக்கேற்ப பிரதக்ஷ்ணம் செய்யப்படுவது வழக்கம். ஏன் இவ்வாறு செய்கிறோம் எனில், ஒருவர் ஒவ்வொரு அடியையும் மிகுந்த கவனத்துடன் கவனக்குவிப்புடன் செய்வதால் அவர் அந்த தருணங்கள் இறை சிந்தனையில் ஒன்றியிருக்க முடிகிறது.

அதுமட்டுமின்றி நாம் ஏற்றிருக்கும்பொருள் தன்மையிலான பாரங்கள், எதிர்மறை ஆற்றல்களிலிருந்து மனம் விடுதலை ஆகிறது. ஒருவர் பற்றுகளில் இருந்து விடுபடுவதற்கு இந்த சுற்றுதல் உதவும். அதனால் இந்த உலகம் தன்னை தானே சுற்றி கொண்டு சூரியனையும் சுற்றிவருவது.

இதனால் தான். ஒருவர் பூஜையை முடித்து விட்டு பிரதக்ஷணம் செய்வதை அத்ம பிரதக்ஷணம் என அழைக்கப்படுகிறது.

ஒரு வட்டத்தை மையமின்றி அமைக்க முடியாது அதை போலவே இறை எனும் மையத்தை சுற்றி வருவதும், நம்மை சுற்றி எப்போதுமே இறை அதிர்வு நிரம்பியிருக்கிறது என்பதை உணரவும் தான் பிரதக்ஷணம் செய்யப்படுகிறது.







# சிவபெருமானின் தமிழ் பெயருக்கு இணையான வடமொழி பெயர்

சிவபெருமானை தமிழ்நாட்டில் சைவர்களின் கடவுளாக திகழ்ந்தாலும், வடஇந்தியாவிலும், சிவபெருமானுக்கு மாற்று பெயரை வைத்து அழைத்து வருகின்றனர்.

கீழே சிவபெருமானின் தமிழ்ப்பெயரும், வட இந்தியாவில் அழைக்கப்படும் பெயரையும் ஆன்மிகமலர்.காம் வாசகர்களுக்காக விரிவாக கொடுத்துள்ளோம்.

| தமிழ் பெயர் | வடமொழி பெயர் |
|---|---|
| 1. அடியார்க்கு நல்லான் | பக்தவத்சலன் |
| 2. அம்மையப்பன் | சாம்பசிவன் |
| 3. உடையான் | ஈஸ்வரன் |
| 4. உலகுடையான் | ஜகதீஸ்வரன் |
| 5. ஒருமாவன் | ஏகாம்பரன் |
| 6. கேடிலி | அட்சயன் |
| 7. சொக்கன் | சுந்தரன் |
| 8. தாயுமானவன் | மாத்ருபூதம் |
| 9. தான்தோன்றி | சுயம்பு |
| 10. தூக்கிய திருவடியன் | கொஞ்சிதபாதன் |
| 11. பரமகுரு, | தென்முகநம்பி,<br>ஆலமரச்செல்வன்<br>தட்சிணாமூர்த்தி |
| 12. புற்றிடங்கொண்டான் | வான்மீக நாதன் |
| 13. நடனசிவம் | நடராஜன் |
| 14. பெருந்தேவன் | மகாதேவன் |
| 15. பெருவுடையான் | பிரகதீஸ்வரன் |
| 16. மாதொருபாகன் | அர்த்தநாரி |
| 17. மணவழகன் | கல்யாணசுந்தரன் |
| 18. வழித்துணையான் | மார்க்க சகாயன் |
| 19. அண்ணாமலையான் | அருணாசலேசுவரன் |
| 20. பிறைசூடன் | சந்திரசேகரன் |

www.aanmeegamalar.com

# கருவில் உள்ள குழந்தை ஆணா பெண்ணா அறிய உதவும் பாடல் வரிகள்



விஞ்ஞானம் வளர்ந்த இந்த காலத்தில் கருவில் இருக்கும் குழந்தையை கண்டுபிடிக்க கருவானது ஓரளவு வளரும் வரை காத்திருக்க வேண்டும், அதன் பின்பே ஸ்கேன் செய்து பார்க்க முடியும், மனிதன் செய்யும் சில தவறுகளால் அரசு அதையும் தடை செய்து விட்டது.

ஆனால் அறிவியல் வளர்ச்சி இல்லாத காலத்திலேயே கரு உண்டான கணத்தில் இருந்தே குழந்தையின் பாலினத்தை துல்லியமாக கண்டறியும் முறையை நம் முன்னோர்கள் நமக்கு கற்பித்துள்ளனர்.

ஒரு பெண் மூச்சு விடும் நாசியின் பக்கங்களை வைத்தும், அந்த பெண் குழந்தையை சுமக்கும் போது எந்த கையை ஊன்றி மேலே எழுகிறார் என்பதை வைத்தும் இன்னும் இது போன்று நிறைய முறைகளில் இதற்கு முன் இருந்தவர்கள் கணித்தனர்.

"கெற்பதானங்கள் பண்ணக்
கிணர்தனிட் சரணங்கணாசி
வற்பணப் பிராணவாய்வு வலத்திலே யோடி லாணாஞ்
சிற்பன விடத்திலோடிற் சிறந்தது பெண்ணதாகும்
பிற்கர வுதயமாகிற் பிலமில்லாக் குருடு வூமை"

– என்ற அகத்தியர் அருளிய இந்த பாடலில் கரு உண்டான காலத்தில் நாசியில் ஓடும் மூச்சுக் காற்றை வைத்தே குழந்தையின் பாலினத்தை நம்மால் கணிக்க முடியும் என்பது தான் இந்த பாடலின் மூலம் நாம் தெரிந்து கொள்ளும் செய்தி.

அதாவது மூச்சுக் காற்றானது வலது புற நாசியில் ஓடினால் ஆண் குழந்தை எனவும், இடது புற நாசியில் ஓடினால் பெண் குழந்தை எனவும், மூச்சுக்காற்று சீராக இல்லாமல் இருப்பின் பிறக்கும் குழந்தை குருடு, ஊமை போன்ற குறைபாட்டுடன் பிறக்கும் என்பதே இதன் விளக்கம்.

இதே போன்று குழந்தை கருவில் உண்டான தேதியில் இருந்து என்னென்ன உறுப்புகள் எந்தெந்த மாதங்களில் உருவாகும், கருவில் குழந்தை உருவான தேதில் இருந்து பிறக்கும் நாள், குழந்தை குறைபாடு, கருச்சிதைவு, மூளை வளர்ச்சி இல்லாமல் பிறப்பது, திருநங்கையாக பிறப்பது போன்ற எண்ணற்ற செய்திகளை துல்லியமாக கொடுத்துச் சென்றுள்ளனர்,

**மேற்கத்திய மோகத்தினாலும், தமிழை தாழ்வாக நினைப்பதாலும், கடவுள் மறுப்பு கொள்கைகளினால் சித்தர் பாடல்களை நாம் புறக்கணிப்பதாலும் இது போன்ற அறிய விடயங்களை நாம் தவற விடுகின்றோம்.**

இவை அனைத்தும் அவர்களின் மெய் ஞானத்தால் தோன்றியவையே, சித்தர் பாடல்களை ஆராய்ந்து வெளிக்கொணர்ந்தால் உலக அளவில் தமிழ் மக்களுக்கு மேலும் அங்கிகாரம் கிடைக்கும். நமது பண்டைய கலாச்சார பண்பாடுகளை குழந்தைகளுக்கும் சொல்லி வளர்த்தால், நமது கலாச்சாரத்தை நம்மால் காக்க முடியும்.

# 140 இதழ்களை கடந்துள்ளோம்

## ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக மூன்றுவித சேவைகளை செய்து வருகிறோம்

1.ஆன்மிகமலர்.காம்
2.ஆன்மிகமலர் Mobile app
3. ஆன்மிகமலர் இ-மேகசின்

## எங்களது அடுத்த சேவையாக

**ஆன்மிகமலர் பப்ளிகேஷன் வாயிலாக**

திருக்குறள், சிவபுராணம், கந்தசஷ்டி கவசம்
ஆன்மிக எழுத்தாளர்களின் ஆன்மிக தொகுப்பு,
ஆன்மிக துணுக்குகள், மகான்களின் சரித்திரம்,
அறிவுரைகள், பழமொழிகளின் தொகுப்பு,
போன்றவற்றை இ-பப்ளிகேஷன் முறையில்
வண்ணமயமான இ-புத்தகங்களாக தயாரிக்கவிருக்கிறோம்.

இந்த புத்தகத்திற்கு sponsor செய்ய விரும்புபவர்களை சிறப்பிக்க, அவர்களின் குடும்ப விசேஷங்கள், திருமணம், பிறந்த நாள், கிரகபிரவேசம் போன்ற சுப நிகழ்வின் நினைவாக அல்லது அவர்களது தொழில் சம்பந்தப்பட்ட விளம்பரங்களை வெளியிடுவதற்காக இந்த புத்தகத்தில் ஒரு பக்கம் ஒதுக்கித்தரப்படும். இதன்மூலம் எங்கள் சேவையில் நீங்களும் பங்கேற்று இறை சிந்தனையை பரப்பலாம்.

sponsor செய்ய விரும்புபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்:
சி.வி.நடராஜன் 9444228203


www.aanmeegamalar.com

# தமிழர்கள் கொண்டாடிய மகாவிஷ்ணு

"கணங்கொள் அவுணர் கடந்த பொலத்தார்
மாயோன் மேய ஓண நன்னாள்"

என்று வரும் மதுரை காஞ்சி வரிகளும்

"ஆணொப் பார்இவன் நேரில்லைகாண்,
திருவோணத்தான் உலகாளும் என்பார்களே"

என்ற பெரியாழ்வாரின் அமுத வரிகளும் தமிழ்மக்கள் இருபெரும் தெய்வங்களான சிவனையும் மாலையும் இருகண்ணாக போற்றி வணங்கினார்கள் என்பது தெளிவு படுத்தும்தொல் காப்பியர் குறிப்பிடும் மாயோன் என்ற சொல்லும் மற்ற சங்க இலக்கியங்களில் காணப் படும் திருமாலை பற்றிய குறிப்புகளும் முல்லை நிலத்து தெய்வமான கார்மேக வண்ணனான கண்ணனே திருமாலாக வணங்கப்பட்டான் என்பதை தெளிவாக நமக்கு உணர்த்துகிறது இது மட்டும் அல்ல பழம் தமிழ் நூல்களில் காணப்படும் இத்தைகைய கருத்துக்கள் திருமால் வழிபாடு என்பது வெளியிலிருந்து வந்ததல்ல தமிழ் மண்ணின் சொந்த தெய்வமே என்பதை ஐயம்திரிபற காட்டுகிறது

**கடவுள் உருவாக்கிய மதம்**

திருமாலை மட்டுமே பாடும் பொருளாக கொண்டு உருவான சங்க இலக்கியம் பரிபாடலாகும் இந்த நூலில் தற்போது கிடைத்துள்ள ஆறு பாடல்களும் வைஷ்ணவ முதல்வனான நாராயண னின் ஐவகை வடிவங்களின் கவியழகு சொட்டசொட்ட நமக்கு படம் பிடித்து காட்டுகிறது காணுகின்ற பொருளில் எல்லாம் கண்ணன் ஒருவனே உள்ளான் என்பதை பரிபாடல் புலவர் கடுவனிளவெயினார் மிக அருமையாக நாம் அறிந்து கொள்ள செய் கிறார்

www.aanmeegamalar.com

தீயினுள் தெறல் நீ பூவினுள் நாற்றம்நீ
கல்லினுள் மணியும்நீ சொல்லினுள்
வாய்மைநீ
அறத்தினுள் அன்பு நீ மரத்தினுள்
மைந்துநீ
வேதத்து மறைநீ பூதத்து முதலும்நீ
வெஞ்சுடர் ஒளியும்நீ திங்களுள் அளியும் நீ
அனைத்தும் நீ அனைத்துனுட் பொருளும் நீ

இந்த பாடலை சொல்பிரித்து தனித்தனியாக உச்சரித்து பாருங்கள் உச்சரிக்கும் போதே உங்கள் உதடுகளில் அமுத சுவை ஒட்டிக்கொள் வதை உணர்வீர்கள்.

இதுவும் இதை போல பல பாடல்களும் சங்க நூல்களில் திருமால் பற்றிய அழகு தகவல்களாக நிறைந்து கிடைக்கிறது அவைகளை தனித் தனியாக எடுத்து பேசப் போனால் மிகப்பெரிய நூலாகவே எழுதலாம்.

நம் நோக்கம் அது அல்ல என்பதாலும் பழம்தமிழ் மக்களின் சொந்த சுய வழிபாடே திருமால் வழிபாடு என்பதை உணர்த்துவதே என்பதாலும் இங்கு சில பலாசுளைகளை மட்டும் ஆதாரங்களாக சுட்டிக்காட்டினேன்.

சங்க இலக்கியங்கள் மட்டுமல்லாது சிலப்பதி காரத்திலும் ஆச்சியர் குரவை பகுதியில் ஓங்கி உலகளந்த உத்தமன் தமிழ்நிலத்து தனிப்பெரும் தெய்வம் என்பதை நமக்கு அறிவுறுத்துகிறது.

இந்தியாவில் ஒரு மூலையில் தோன்றிய விஷயமானாலும் அது நல்லதாக பயனுள்ளதாக வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடியாதாக இருந் தால் அது யாரும் எடுத்து சென்று பரப்பாமலே நாலா திசையிலும் பரவிவிடும் இதுதான் இந்திய பண்பாட்டின் தனிச்சிறப்பு.

இதனடிப்படையில் நாவலம் தீவு என்ற பாரத திருநாட்டில் தெற்கு பகுதியில் தோன்றிய ஸ்ரீ வைஷ்ணவம் இமயம் வரையும் ஏன் இமய வரம்பை தாண்டியும் எட்டு திக்கிலும் பல்கி பரவியது எனலாம்.

கௌதம புத்தரின் உபதேசங்களை யும் பவுத்த நெறிகளையும் எடுத்து இயம்பும் திரிபீடகங்களுக்கு எழுதப்பட்ட நித்தேசம் என்ற மிக பழைமையான தெளிவுரையில் திருமாலை வாசுதேவனாகவும் பலதேவனாகவும் பண்டையமக்கள் வணங்கி இருப்பதாக தகவல் பதிவு



செய்யப்பட்டுள்ளது கிமு முதல் நூற்றாண்டில் எழுதப்பட்டதாக கூறும் பதஞ்சலி முனிவரின் பாணினி வடமொழி இலக்கண நூலில் வாசுதேவ வணக்கம் மக்கள் மத்தியில் மிக புகழ் பெற்று பரவிஇருந்ததையும் நமக்கு சொல்கிறது இதை போல கிமு இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று வட இந்தியாவில் கோசுண்டி என்ற இடத்தில் கண்டுபிடிக்க பட்டது அதில் திருமால் வழிபாடு மன்னர்களாலும் மக்களாலும் எவ்வளவு புனித தன்மையுடன் கடைபிடிக்க பட்டது என்பதை விளக்கப்பட்டுள்ளது கிரேக்க நாட்டு இதிகாசங்களிலும் வரலாற்றிலும் விஷ்ணு வழிபாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டதை அறிய முடிகிறது



இவ்வளவு அறிய பெரிய ஸ்ரீ வைஷ்ணவ மரபை உலகுக்கு தந்தது தமிழ்நாடே தவிர தமிழ்நாட்டிற்கு இது கொண்டுவரப்பட்டது அல்ல.

ஸ்ரீ வைஷ்ணவம் கடவுளை கடவுளாக மட்டும் பார்ப்பது அல்ல அது கடவுளை மனிதனாகவும் பார்க்கிறது மனிதனையும் கடவுளாக பார்க்கிறது தரித்திரனுக்கு செய்யம் தொண்டே நாராயணனுக்கு செய்யும் தொண்டு என முதல் முதலில் சமய உலகில் சமூக புரட்சியை ஏற்படுத்தியது.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

ஸ்ரீ வைஷ்ணவமே ஆகும் நாராயணனுக்கு இந்த உலகம் புறம்பாக இல்லை நாரணனும் உலகத்திற்கு புறம்பாக இல்லை நீ காணுகின்ற மனிதனும் புழு பூச்சிகளும் நாராயண வடிவமே நாராயண அம்சமே என்பதை எடுத்து காட்டியது ஸ்ரீ வைஷ்ணவம் ஆகும் கடவுள் ஆடம்பரங்களை ஆரவாரங்களை விரும்புவன் அல்ல அவன் எளிமையையும் அன்பையும் தியாகத்தையும் விரும்புவனே என்று சொல்லி ஆன்மிக வாழ்வில் புது வழியை காட்டியது ஸ்ரீ வைஷ்ணவமாகும்

நாராயணன் முன்னால் நாடாளும் மன்னனும் அடிமையும் ஒன்றே வேதம் ஓதும் பண்டிதனும் அழுகிய மாமிசம் சுமக்கும் புலையனும் சமமே என்பதை சொல்லால் மட்டும் அல்ல செயலாலும் காட்டியது ஸ்ரீ வைஷ்ணவம் கடவுளின் அருள் அம்சத்தை தேவ பாஷையில் மட்டும் அல்ல தெய்விக மொழிலும் சொல்லியது ஸ்ரீ வைஷ்ணவம் அதர்மமும் தீமையும் கோலோச்சும் போது அடிமையாய் பேடியாய் ஒளிந்து கிடக்காதே மறைந்து வாழாதே எழுந்து நில் எதிர்த்து நில் மோதி மிதித்து விடு வஞ்சகர் முகத்தில் உமிழ்ந்து விடு என்று கோழைக்கு கூட வீர உபதேசம் செய்தது ஸ்ரீ வைஷ்ணவம்

நமது இந்து மதம் மாபெரும் சமூத்திரம் என்றால் அந்த சமூத்திரத்தில் கலக்கும் புண்ணிய கங்கை ஸ்ரீ வைஷ்ணவம் இது கடவுளை வைகுண்டத்தில் வைத்து அழகு பார்த்து வழிபடும் மோட்ச மார்க்கம் மட்டுமல்ல முழுமுதலான மூல பரம்பொருளை பூமிக்கு இறங்கி வர செய்து மானிட கஷ்டத்தை நீயும் படு நான் விடுபட வழியும் சொல்லு என்று கடவுளையே கட்டி இழுத்த வாழ்க்கை மார்க்கமாகும் அத்தகைய உயர்ந்த உயரிய ஸ்ரீ வைஷ்ணவ நெறியை எளிமையாக விளக்கமாக நமது இந்து மத வரலாற்று தொடரில் இனி காண்போம்.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434



ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# கண்ணுக்குப் புலனாகாத மனிதன்

பிரேமாவதார குருதேவர் அருளுகிறார்: “மனிதன் கண்ணுக்குப்புலப்படாதவன் என எண்ணுவது சிறிதும் பொருந்தாமல் உள்ளது. ஒவ்வொரு நாளும் ஒரு ஸ்தூல சரீரமாக நமக்கு நாமே தென்படுகிறோம். ஆனாலும் நமது அடிப்படையான, கண்ணிற்குப் புலனாகாத தன்மையை பல வழிகளில் நாம் வெளிப்படுத்துகிறோம். உதாரணமாக உங்கள் கண்களை மூடுங்கள். உங்களுடைய வடிவம் உங்களுக்குப் புலனாகவில்லை. நீங்கள் இருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? உங்களுக்கு உடலின் எடையைப்பற்றிய உணர்வு உள்ளது; உங்களால் கேட்க , முகர, சுவைக்க மற்றும் தொட முடிகிறது. இருப்பினும் வெறும் எண்ணங்கள் என்ற வகையில் மட்டுமே உங்களுக்கு நீங்கள் நிஜமாக உள்ளீர்கள். அனேக எண்ணங்கள், சுற்றிவலம் வரும் கண்ணிற்குப் புலனாகாத ஒரு மையமே நீங்கள். இப்போது கண்களை திறந்திருங்கள். நீங்கள் உங்களைக் காணும் அந்த வடிவமா அல்லது மூடிய கண்களுடன் தற்பொழுதுதான் நீங்கள் உணர்ந்திருந்த அந்த உள் வடிவமா?”


www.aanmeegamalar.com

“கண்ணிற்குப்புலப்படும் மனிதன் முக்கியத்துவம் குறைந்தவன். கண்ணுக்குப் புலப்படாத ஆன்மா அல்லது உயிர். அதிக முக்கியமானது. நித்திரையின்போது கண்ணுக்குப் புலப்படும் மனிதனைப் பற்றிய உணர்வு உங்களிடம் இல்லையென்றாலும், உங்களைப்பற்றி நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். ஏனெனில் விழித்து எழுந்ததும் நன்றாகத் தூங்கினீர்களா அல்லது குறைவாகத் தூங்கினீர்களா என்பது உங்களுக்குத் தெரிகிறது. ஆகவே கண்ணிற்குப் புலப்படாத உங்களுடைய ஆன்மாதான் உண்மையானது. அதை அகற்றி விட்டீர்களானால், உங்களுடைய வெளியே புலம்படும் தன்மை அர்த்தமற்றதாகிறது.

கண்ணிற்குப் புலப்படாத ஆன்மா இல்லாமல், உடல் பயனற்ற ஒரு பிரேதத்தைப் போன்று ஆகிவிடுகிறது. கண்ணிற்குப் புலப்படாத உள்ளே உள்ள மனிதனே நிஜமானவன். ஆனால் வினோதம் என்ன வென்றால், கண்ணுக்குப் புலப்படாத அந்த ஆன்மா என்பது என்ன என்று மனிதன் ஆராய முயலவில்லை என்பதுதான். தன் உடலின் வெளித்தோற்றத்தைப்பற்றியும், அதன் நலத்தைப்பற்றியும் இடைவிடாமல் சிந்தித்தவண்ணமிருந்து, காணப்படாத அக ஆத்மா உண்மையானது என்று பகுத்தறிய முற்படாமல் அவன் காணக்கூடிய வடிவில் மட்டுமே அதிக அக்கறை கொண்டிருக்கிறான்.”

134
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

“ஸ்தூல உடலுக் குள் ஆனாலும் ஸ்தூலகண்களுக்குப் புலப்படாமல் அதை



குருப்ரியா

முழுவதும் ஒத்துள்ள ஓர் ஒளி உடம்பு அதாவது ஆன்மாவை மூடியுள்ள ஒரு சூட்சும உறை உள்ளது. உங்களுடைய விரல்களில் ஒன்று வெட்டப்பட்டு விட்டால் அது இன்னும் அங்கு இருப்பதாகவே நீங்கள் உணர்கிறீர்கள். ஓர் அங்கத்தை இழந்துவிட்ட எவரும் இந்த உணர்வை அறிவர். உடலின் சகல பாகங்களுக்கும் கண்ணுக்குப் புலப்படாத சூட்சும ஒத்த பாகம் உண்டு. உங்களுடைய ஸ்தூல இதயத்திற்குப் பின்னால் கண்ணுக்குப் புலப்படாமல் ஓர் இதயம் உள்ளது. அது இல்லை என்றால் உங்களுடைய இதயம் துடிக்காது. நீங்கள் பார்ப்பது, கேட்பது ஆகியவற்றிற்கான கண்ணிற்குப் புலனாகாத அங்கங்களையும், கண்ணிற்குப் புலனாகாத ஒரு மூளையையும், கண்ணுக்குப் புலனாகாத எலும்புகளையும், நரம்புகளையும், பெற்றிருக்கிறீர்கள். ஒளி மற்றும் சக்தியின் திசுக்களினால் ஆன இந்த பாகங்கள், கண்ணிற்குப் புலனாகாத மனிதனின் சூட்சும உடலை அமைக்கின்றன. ஒளியாலும் சக்தியாலும் ஆக்கப்பட்டுள்ள அதன் வடிவம் மிக அதிக நுட்பமாக இருப்பதைத் தவிர, சூட்சும உடல், மிகத்துல்லியமாக ஸ்தூல உடலைப்போன்றே தோற்றமளிக்கிறது.”

அவர் மேலும் தொடர்கிறார்: “நீங்கள் உடல்ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளபோது, “என்பார்வை போய்விட்டது” அல்லது “நான் ஒரு கரத்தை இழந்துவிட்டேன்,”எனக் கூறக்கூடாது. பார்வைக்குத் தென்படாத உங்கள் கண்களும் கரங்களும் இன்னும் உள்ளன. உங்களுடைய ஸ்தூல கரம் செயலிழந்து இருந்தாலும், உங்களுடைய கண்ணுக்குப்புலனாகாத கரம் பலவீனமடையவில்லை. உடல் உறுப்புகளின் நோயால் கண்ணுக்குத் தெரியாத உறுப்புகள் எந்த விதத்திலும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஒருபோதும், நம்பாதீர்கள். ஏனெனில் அறிவுத்திறம் வாய்ந்த ஜீவசக்தி ஸ்தூல உடல் உறுப்புகளுக்குள் பாய்வதை உங்களுடைய எதிர்மறையான எண்ணம் தடை செய்யும்,”

“மின்னோட்டங்கள் ஒரு கம்பியின் ஊடாகச் செலுத்தப்படுகின்றன. இவற்றில் எது அதிக முக்கியமானது, கம்பியா அல்லது மின் சக்தியா? கம்பியானது மின் சக்தியைக் கடத்துவதற்காக மட்டுமே இருக்கிறது, கம்பிக்காக மின்சக்தி இருக்க வில்லை. அவ்வாறே உடலானது ஆன்மாவாகிய கண்ணுக்குப் புலனாகாத மனிதனுடைய உபயோகத்திற்காகவே இருக்கிறது. அவன் உடலுக்காக இல்லை. இருப்பினும் கண்ணுக்குப் புலனாகாத ஆன்மா அங்கே தங்கியிருப்பதற்கு பூதவுடல் குறிப்பிட்ட ஒரு தகுதியான நிலையில் கட்டாயம் இருக்க வேண்டும்.”

“இந்தக் கண்ணுக்குப் புலப்படாத ஆன்மா, உடலுடன் கட்டப்பட்டிருப்பது என்ன பரிதாபம்! அங்ஙனம் இல்லாமல் இருந்திருந்தால். நாம் நீர்மேல்நடந்தும் வானத்தில் பறந்தும் பின்பு பூத உடலுக்குத் திரும்பி வந்துவிடவும் முடிந்திருக்கும். கண்ணுக்குப் புலனாகாத ஆன்மாவின் சூட்சும உடல், அதன் ஸ்தூல பாகங்களைவிட மிக அதிகமான புலன் உணர்வுகளைப் பெற்றிருக்கிறது. பல குறைபாடுகள் கொண்டுள்ள ஸ்தூல தேகத்தைவிட சில வழிகளில் மேம்பட்ட இயந்திரங்களை மனிதன் கண்டுபிடித்துள்ளான். ஆனால் கண்களை மனிதன் கண்டுபிடித்துள்ளான். ஆனால் கண்ணுக்குப் புலனாகாத சூட்சும உடலைப்பற்றிய உங்கள் உணர்வுநிலை விருத்தி அடையும்போது, பூதஉடலின் செவிகள் கேட்க முடியாததை அது கேட்கும் என்பதையும், பூத உடலின் கண்கள் பார்க்க முடியாததை அது பார்க்கும் என்பதையும் நீங்கள் தெரிந்துகொள்வீர்கள். ஐம்புலன் எல்லைக்கு அப்பால், வெகு தொலைவிலுள்ள பொருட்களை அதனால் நுகரவும், சுவைக்கவும் தொட்டு உணரவும் முடியும். மேலும் அதை நினைத்தவுடன் பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ, சினிமா திரையில் விழும் படங்களை சினிமாப் படக்காட்சி இயந்திர அறை (ப்ரொஜக்ஷன் பூத்)யிலுள்ள மனிதனால் எவ்வாறு சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ ஆக்க முடியுமோ அதுபோல் நீங்கள் செய்ய முடியும்,” என்கிறார் குருதேவர்.

கண்ணுக்குப் புலனாகாத மனிதன் துயரத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுதலை பெற்றவன்.

அன்பிற்குரிய குருதேவர் அருளுகிறார்: “நோய், காயம், வறுமை, பசி மற்றும் மரணம் ஆகிய துயரங்களுக்கு தேகம் கட்டுப்பட்டுள்ளதால் கண்ணுக்குப் புலனாகும் தசையாலான இந்தத் தேக உணர்வு நிலையில் மட்டும் வாழ்வது ஆன்மரீதியாக தாமதப்படுவதாகும். நாம், நம்மை இந்தக் கண்ணுக்குப் புலனாகின்ற பலவீனமான, அழியக்கூடிய தேகம் என எண்ணுவதற்கு விரும்பக்கூடாது. நமக்குள் உள்ள கண்ணுக்குப் புலனாகாத மனிதனைக் காயப்படுத்தவோ அல்லது கொல்லவோ முடியாது. தெரிந்திருக்காத இறப்பற்ற நம்முடைய இயல்பை நாம்

தெரிந்துகொள்வதற்கு அதிக முயற்சியை எடுக்க வேண்டாமா? கண்ணுக்குப் புலனாகாத இந்த ஆன்மாவைப்பற்றிய அறிவை நாம் அதிகரித்துக்கொள்ளுவதன்மூலம், மகிமை வாய்ந்த மகான்கள் செய்வதுபோல், கண்ணுக்குப் புலனாகும் மனிதனை நாம் கட்டுப்படுத்த வல்லவர்கள் ஆவோம். கண்ணுக்குப் புலனாகும் மனிதன் கவலையில் ஆழ்ந்துள்ளபோதும்கூட, தான் அகத்தே இருக்கும் கண்ணுக்குப் புலனாகாத மனிதன் என்ற வகையில் தனது தெய்வீக சக்திகளை உணர்ந்துள்ளவன், தேக ரீதியான துயரங்களிலிருந்தும் விடுபட்டு இருக்க முடியும்.”

“இப்படிப்பட்ட கட்டுப்பாட்டை நீங்கள் எப்படிப்பெறுவீர்கள்? நீங்கள் முதலாவதாக அதிக அளவில் மௌனமாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்; தியானிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். ஆரம்பத்தில் இது உற்சாகமற்றதாகத் தோன்றக்கூடும்; நீங்கள் இந்தக் கண்ணுக்குப் புலனாகும் இந்தத் தேகத்தினுடைய முடிவற்ற தொல்லைகள், ஆசைகள் மற்றும் தேவைகளைவிட வேறெதைப்பற்றியும் சிந்திப்பது கடினமாகத் தோன்றுமளவிற்கு அதனுடன் வெகு நெருக்கமான தொடர்பு வைத்துள்ளீர்கள். ஆனாலும் முயற்சி செய்யுங்கள். உங்களுடைய கண்களை மூடிக்கொண்டு “நான் இறைவனின் வடிவில் படைக்கப்பட்டுள்ளேன். எனது உயிர் எந்த வழிவகையினாலும் அழிக்கப்பட முடியாதது. நான் என்றும் நீடித்துள்ள கண்ணுக்குப் புலனாகாத மனிதன்,” எனத் திரும்பத் திரும்பக் கூறுங்கள்.

உங்களுடைய அழிவற்ற தன்மையை இப்பொழுதே அறிந்துகொள்ளுங்கள்.

அவர் மேலும் கூறுகிறார்:

“கண்ணுக்குப்புலப்படாத மனிதன் எவ்வாறு ஸ்தூல தேகத்துடன் ஸ்தூல உலகில் குறிப்பிட்ட அனுபவங்களுக்கான மனம் மற்றும் உணர்ச்சி ரீதியான ஆசாபாசக் கயிறுகளாகிய பந்தங்கள் மூலம் “கட்டப்பட்டு” உள்ளான் என்பதையும்கூட நீங்கள் அறிந்துகொள்வீர்கள். ஆழ்ந்த தியானத்தால் அக்கயிறுகளை நீங்கள் அவிழ்க்க முடியுமானால், அவன் விடுதலை பெறுவான். அத்துடன் நீங்கள் இறைவனின் உண்மையான ஒரு வடிவம் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். தேக உணர்ச்சிகள் மற்றும் சடப்பொருட்கள் எனும் காட்டில் கைதியாக பிடித்துவைக்கப்பட்டுள்ள அந்தக் கண்ணுக்குப் புலனாகாத மனிதனைத் தேடுங்கள்.

“கண்ணுக்குப் புலப்படாத மனிதனையும், அவனுடைய வெளிப்புற ஸ்தூல உடல், அவனுடைய நடுத்தர ஒளி உடல் மற்றும் அவனுடைய உட்புற எண்ண உடல் ஆகியவற்றின் அதிசயத்தையும் நீங்கள் புரிந்து கொண்டு விட்டவுடன் நீங்கள் எவ்வளவு அற்புதமான படைப்பு என்பதை அறிந்து கொள்வீர்கள்! அந்தக்


அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203



மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

கண்ணுக்குப்புலப்படும் மனிதன் ஒரு மாயையே; அகத்தே இருக்கும் புலப்படாத மனிதனே உண்மையானவன். இதை நீங்கள் அறியும்போது, எலும்பும் தசையும் நீங்கள் அல்ல, நீங்கள் அழிக்க முடியாத, கண்ணுக்குப் புலனாகாத மனிதன் என்பதைத் தெரிந்துகொள்வீர்கள்."

அவர் மீண்டும் ஆணித்தரமாகக் கூறுகிறார்: "நீங்கள் இறக்க முடியாது! முதுமையடைவதையும் மயானத்திற்கு ஆயத்தமாய் இருப்பதையும் பற்றிய எண்ணங்களில் இனிமேலும் ஈடுபடாதீர்கள். இறப்பற்ற நிலைக்காக நீங்கள் உங்களைத் தயார் செய்துகொண்டிருக்கிறீர்கள்! எதுவும் இறப்பதில்லை. எண்ணக் கருத்தாலான உங்களுடைய தேகத்தின் பூர்வாங்கவடிவம் எப்பொழுதும் விண்வெளியில் உள்ளது. இறந்துபோகின்ற உங்களுடைய அன்பிற்குரியவர்கள் இருக்கும் சூட்சும உலகில் அவர்களுடைய நுட்பமான வடிவங்களைக் காண்பதற்குத் தேவையான மன ஒருமுகப்படும் சக்தி உங்களிடம் இல்லாததால், அவர்கள் என்றென்றைக்குமாக மறைந்துவிட்டனர் என நினைக்கிறீர்கள். இந்த உண்மைகளில் உங்கள் மனதை இருத்தி, உங்களுக்கு அமைதியான தருணம் கிடைக்கும்போதெல்லாம் அவற்றை மீண்டும் மீண்டும் உங்களுக்கே கூறிக்கொள்ளுங்கள், "நான் இறைவனுடைய எண்ணத்தினாலான மூலவடிவத்தின் அச்சு, இறைவனின் ராஜ்யத்தில் என்றும் திரியும் நான் நித்தியமானவன்." நீங்கள் அந்த இறப்பற்ற, கண்ணுக்குப் புலனாகாத மனிதன். மேலும் என்றும் அவ்வாறே இருப்பீர்கள். உங்களுடைய அழிவற்ற தன்மையை இப்பொழுதே ஏன் அறிந்துகொள்ளக்கூடாது?"

"இருமைத்தன்மையுடைய இவ்வுலகம் உண்மையானது என்று எண்ணுமாறு உங்களுடைய இரண்டு ஸ்தூல கண்கள் உங்களை ஏமாற்றுகின்றன. உங்களுடைய ஆன்மீகக் கண்ணைத் திறந்து உங்களுடைய கண்ணுக்குப் புலனாகாத வடிவத்தைக் காணுங்கள். அகத்தின் அமைதியில் உங்கள் ஆன்மீகக் கண் திறந்திருந்தால் கண்ணுக்குப் புலப்படாதது புலப்படுவதாகிறது. நீங்கள் சிந்தித்துக்கொண்டும், கனவு கண்டுகொண்டும் அல்லது ஆழ்ந்து ஒருமுகப்பட்டும் இருக்கும்பொழுதெல்லாம் நீங்கள் அந்தப்புலப்படாத மனிதன் ஆவீர். இறைவன் நிஜமானவன்; கண்ணுக்குப் புலப்படும் மனிதன் நிழலானவன். நிழலை மறந்துவிட்டு நிஜத்தை நினைவில் வைத்திருங்கள். கண்ணுக்குப் புலப்படாத மனிதனுடன்ஷஇறைவனின் பிரதிபலிப்புடன் ஒன்றுபட்டிருங்கள்" என்று உண்மையை விளக்குகிறார் குருதேவர்.

இந்த பிரபஞ்சத்தில் உண்மையானதும் நிலைத்து நிற்பதும் இறைவன் ஒன்றுதான். இறைவனைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. உண்மையைத்தான், உண்மையை மட்டும் தான் வணங்கவேண்டும், பணிய வேண்டும். மனிதனை இறைவனின் பிரதிபிம்பமாகப் படைத்துள்ளான் இறைவன். இந்த கட்டுரையில் குறிப்பிட்டுள்ள குருதேவரின் போதனைகள் கூறுவதென்னவென்றால், கண்ணுக்குப் புலப்படும் மனிதன் ஸ்தூல உடலும் கண்ணுப்புலப்படாத மனிதன் சூட்சும உடலும் ஆக உள்ளன. ஆன்மீகக் கண் திறந்திருந்தால் கண்ணுக்குப் புலப்படாதது புலப்படுவதாகிறது என்ற இரகசியத்தை குருதேவர் வெளிப்படுத்தியுள்ளார். ஆன்மீகக் கண் திறக்கவேண்டுமென்றால் தியானம் செய்ய வேண்டும். அடிப்படை அதுதான். இந்த உலகமும் உலகப்பொருட்களும் எல்லாம் உண்மை அல்ல என்ற 'உண்மையை' அறிய வேண்டும், உண்மையான வாழ்க்கை (இறைவனுடனுள்ள வாழ்க்கை) வாழ வேண்டும் என்றும் யார் யார் நினைக்கிறார்களோ அவர்கள் வைராக்கியத்துடன் தேட ஆரம்பிப்பார்கள். வைராக்கியம் மனதில் வேரூன்றியிருந்தால் அதாவது எப்படியாயினும் கண்டுபிடித்தே ஆகவேண்டும் என்ற பிடிவாதமான வைராக்கியம் தழைத்திருந்தால் நிச்சயம் கண்டுபிடித்துவிடலாம். இந்த உண்மையான, உன்னதமான, மகத்தான விஷயத்தை அடைவதற்கு இந்தப் பிரபஞ்சமே ஒருவனுக்கு துணை நிற்கும் என்பதில் ஆச்சரியமில்லை..

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

www.aanmeegamalar.com




# பயத்தைப் போக்கி, மனோதைரியம் தரும் காளி வழிபாடு

காளி என்று சொன்னால், உக்கிரமான சக்தி என்று எல்லோரும் நினைத்துக் கொண்டு, காளி வழிபாட்டை வீட்டில் செய்வதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள்.

ஆனால் நம் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டும் மந்திரங்களைக் கொண்டுள்ள தேவி மகாத்மியத்தில்

சத் மகாலக்ஷ்மி என்றும், சித் சரஸ்வதி என்றும், ஆனந்தமே மகாகாளி என்றும் கூறப்பட்டுள்ளது. ஆற்றலே வடிவான காளியைச் சரணடைந்தால், அவள் நம் பாவங்களையெல்லாம் பொசுக்கி, நாம் நம் லட்சியத்தை அடையச் செய்கிறாள்.

நம் உடலில் நரம்புமண்டலத்துக்கு அதிபதியாகத் திகழும் காளிதேவியை வழிபட்டால், எதிர்ப்புகள் எல்லாம் இல்லாமல் போவதுடன், எண்ணிய எண்ணங்கள் நிறைவேறி சந்தோஷ வாழ்க்கை அமையும்.

தென் திசைக் காவலனாக விளங்கும் எமதர்ம

ஆன்மிகமலர்



ராஜன் காளி என்ற பெயரைக் கேட்டால் விலகி ஓடி விடுவான்.

தேஜஸ்வினீ, பராசக்தி, பரப்பிரம்ம சொரூபிணி, மோட்சதா, திகம்பரா, சித்விலாசனி, சின்மயி ஆகிய நற்பெயர்களைக் கொண்டவள் காளி.

சிறப்புடைய காளிக்கு கொற்றவை, துர்கை, சாமுண்டி என்று பல பெயர்கள் உள்ளன.

புறப்பொருள் வெண்பாமாலை இலக்கண நூலிலும், கலிங்கத்துப் பரணியிலும் காளி வழிபாடு வெற்றிக்குரிய பிரார்த்தனை முறையாகச் சொல்லப்பட்டதைக் கவனிக்க வேண்டும். ஆகம கிரந்தங்களில் காளி தேவியைப் பற்றி பல தியானங்கள் இருக்கின்றன. அவற்றில் பத்ரகாளி தியானம் அனைவராலும் சொல்லப்படுகிறது.

இந்த தியான விதிப்படி காளிக்கு எட்டு கைகள், மூன்று கண்கள், டமருகம், சூலம், கபாலம் கையில் ஏந்தியபடி, அபய வரத ஹஸ்தங்களுடன் காட்சி தருபவளாகச் சொல்லப்பட்டுள்ளது.

கும்பகோணம், பாபநாசம், திருநாகேஸ்வரம், தேப்பெருமாள் நல்லூர், குத்தாலம், திருவாரூர், மயிலாடுதுறை உள்ளிட்ட பகுதிகளில் சித்திரை மாதம் முழுவதுமே மேற்சொன்னபடி 8 கைகளோடு கூடிய காளிதேவியைப் போல ஒரு பக்தருக்கு வேடமிட்டு ஊர்வலமாக அழைத்து வந்து ஆரத்தி எடுப்பதைக் காளிகட்டித் திருவிழாவாகக் கொண்டாடுவர்.

காளியை உபாசனை செய்து வழிபடுபவர் களுக்கு இன்பம், துன்பம், அறம், அன்பு, வெறுப்பு, அழகு, கோரம், அதர்மம் என்ற அனைத்தையும் ஒன்றாகவே பாவிக் கத் தோன்றும்.

உடலில் பயத்தைப் போக்கி, மனோ தைரியத்தை வரவழைக்கும் காளி வழிபாடு பற்றி ஒரு துதியால் அறிய முடிகிறது.



புனிதவேல்

**காமேசஸ்ய ஸீவாம பாக நிலயாம்**
**பக்தாகிலேஷ்டார்த்ததாம்**
**சங்கம் சக்ர மதாசவயம் ச வரதம்**
**ஹஸ்தைர் ததானம் சிவாம்**
**ஸிம்ஹஸ்தாம் சசிகண்ட மௌலி**
**லசிதாம் தேவீம் த்ரிநேத்ரோஜ் வலாம்**
**ஸ்ரீமத் விக்ரம ஸூரிய பாலன பராம்**
**வந்தே மகா காலிகாம்.**

விளக்கம்: 'காமேஸ்வரக் கடவுளின்இடது பாகத்தை அலங்கரித்திருப்பவளும், தன் பக்தர்கள் கேட்பதைக் கொடுப்பவளும், அவர்களைப் பாதுகாக்கின்ற அடையாளமாகச் சங்கு சக்கரம் கொண்டு வரம் அளிப்பவளும், பிறை நிலவு தரித்து, பிரகாசமாக விளங்கும் முக்கண்களோடு, சிங்கத்தின் மீது அமர்ந்து அழகு உருவமாகக் காட்சி தருபவளும், சூரிய வம்சத்தில் பிறந்த விக்ரமார்க்க அரசனைக் காத்து நன்மை தருவதில் அக்கறை உடையவளுமான காளிதேவியை வணங்குவோமாக !'

விஸ்வாமித்ர மகரிஷி அருளிய துதியில், ஆதிகாளி, தட்சிணகாளி, க்ரீம்காளி, ஸ்திதி காளி, பத்ரகாளி,ச மதுகைடப சம்ஹார காளி, குஹ்ய காளி, வர காளி, சதுர்புஜ காளி, நடன காளி என்ற பத்து காளி வடிவங்கள் சொல்லப் பட்டுள்ளன. காளியின் அருள் பெற்றதால் தான் மகாகவி காளிதாசன் குமார சம்பவம், ரகுவம்சம், மேகசந்தேசம், சாகுந்தலம் போன்ற அமர காவியங்களை இயற்றமுடிந்தது.

காளி பூஜையை வீட்டில் செய்வதற்குமுன் ஒரு விஷயத்தை கவனத்தில் கொள்ளவேண்டும். சில பக்தர்கள் காளிக்கு உகந்தது என்று தவறாக நினைத்துக் கொண்டு, மாமிசம் போன்றவற்றைப் படைக்கின்றனர். அது சரியல்ல. காளிவழிபாடு தொடங்கப்பட்ட ஹர்ஷவர்தனர் காலத்திலும் சரி, மகரிஷிகளின் சக்தி தத்வ நூல்களிலும் சரி. மாமிசப் படையல் குறித்து எதுவும் சொல்லப் படவில்லை.

**காளி பூஜை செய்யும்முறை...**

அமாவாசை அன்று மாலையிலோ, வெள்ளிக் கிழமை, திங்கட்கிழமை அன்றோ, சதுர்த்தசி திதி நாளிலோ காளியை வழிபடுவது நல்லது. அஷ்டமி, நவமி, சிவராத்திரி, பரணி நட்சத்திர தினங்களும் உத்தமம்.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572

எங்கள்
சேவைக்கு
உங்களின்
உதவி தேவை

# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள்
ரூ.10 முதல் தங்கள்
வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி
எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள்,
கீழ்காணும் ஸ்கேனர் மற்றும்
வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
Paytm | BHIM

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

# கலைகள் அனைத்தும் ஆண்டவனால் உருவாக்கப்பட்டது

## நூலும் நூலும்

நாலு சட்டம் நூல் நூற்றிருந்தாலும் அது துணி ஆகாது. துணி நெய்பவனிடம் கொடுத்து நெய்தால் தான் துணி. எவ்வளவு சாஸ்த்திர நூல்கள் படித்திருந்தாலும் மந்திரங்கள் தெரிந்திருந்தாலும் குருநாதன் என்ற நெசவாளியிடம் போகாமல் பணிவு, பக்தி போன்ற இறைக் குணங்கள் வராது, அருளும் கிட்டாது. பக்தி பணிவுடன் இருந்தால் நூல்களைத் தெரிந்து கொள்ளாமலே அருள் கிட்டி விடும். உனக்கு எது வேண்டும் நூலா? துணியா?

## பரிணாம வளர்ச்சிப் படம்

கோவிலுக்குப் போவது – உற்சவம் பார்ப்பது – கடவுளைத் தூக்குவது – சுத்தம் செய்வது – துதிப்பது – அனைவரையும் சமமாக நினைப்பது – சமாதி இந்த குணங்களான ஏணி வழியாக உயர லாம். காமம், குரோதம், ஆணவம், இத்யாதி இத்யாதி குணங்களான பாம்பு வழியாக இறங்கலாம். பக்தி செய்தால், குருவைச் சரணடைந்தால் அவனே ஆட்டம் ஆடி நம்மை உயர்த்துவான். ஆடி நம்மை உயர்த்துவான். இதுதான் பரிணாம வளர்ச்சியின் வரைபடம்.

## பல்பொடியும் பகவானும்

பல்பொடி விற்பவன் எல்லா சினிமா பாட்டையும் பாடுகிறான். மக்கள் மகிழ்ந்திருக்கும் வேளையில் தான் கொண்டுவந்த பல்பொடியை விற்கிறான்.

அவனுக்கு பாட்டில் எந்த தனி அபிப்பிராயமும் இல்லை. அதுபோல் எல்லா மதங்களிலும் இருக்கும் கடவுளை விற்க, அனைவரையும் பக்தர் களாக்க ஞானி எல்லா மதத்தையும் அணைத்துக்கொண்டு போகிறான். ஞானிக்கு மதமும் முக்கியமில்லை. கடவுளை எல்லார் மனதிலும் வைக்க வேண்டும். அதுவே லட்சியம்.



## ஞானிகளுக்கு பெயர் எதற்கு?

டாக்டர் தன் பெயரை ஏன் பலகையில் போட்டு விளம்பர படுத்துகிறார்கள். பணம் சம்பாதிக்க மட்டுமா? இல்லை உங்கள் வியாதியை குணம் செய்து உதவி செய்ய இதோ ஒருவன் இருக்கிறான் என்று தெரிவிக்க. இறைவனை உணர்ந்த ஞானிகளும் கடவுள் அளித்த பெயரை உபயோகப்படுத்துவது அதற்கே. தங்கள் சுய விள ம்பரத்திற்கல்ல.

## மனிதனும் மகேசனும்

ஒரு பணக்காரனுக்கு முன்னால் நின்று வணங்கினால் அவன் அதை ஏற்றுக்கொள்வான். ஆனால் உனக்கு பலன் ஏதும் இருக்காது. இறை வன் உன் கண்ணுக்கு முன்னால் இருப்பது உனக்கு தெரியது.

அவன் கோவில் கர்ப்பத்தினுள் இருக்கிறான் என்று உன் எண்ணம். இருந்தும் வெளியில் இருந்தபடியே அவனை அன்புடன் எண்ணி வணங் கினால் அவன் உங்களை ஏற்பதுடன் உங்களுக்கு வாழ்த்துக் கூறி நன்மை செய்கிறான். இது தான் மனிதனுக்கும் மகேச னுக்கும் உள்ள வித்தி யாசம்.

## கடவுள் வியாபாரம்

ஒரு விதத்தில் கடவுளும் வியா பாரமும் ஒன்றே. வியாபாரம் செய்ய ஆசைதான். ஆனால் மனதில்மட்டும் இருந்து என்ன பயன். செயலில் அல்லவா இறங்கவேண்டும். எண்ணத்தினால்




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**


நினைவால் பக்தர்களாக ஆஸ்த்திகர் களாக இருந்து என்ன பயன்? செயல் பட்டால் தான் பக்தன் பணம் இருந்தால் தான் வியாபாரம். தியானம் செய்தால்தான் மனம் மாறினால்தான் பக்தனாகமுடியும். செயல்கள் பலன் தருகிறது என்றால்தான் வியாபாரம் சுவைக்கும். நம் பக்தி இறைவனை சந்தோஷப் படுத்தினால் தான் பக்தன் சுவையாக இருக்கிறான்.

## எந்த பலி வேண்டும்?

இறைவனுக்குக் கொடுக்கும் பலிகள் இரண்டு வகை. நற்பலி இறைவனை உபதேசித்து செய்வது. தீயபலி வளராது அழிவை செய்து தானும் ஒழிந்துவிடும். உலக வாழ்க்கைக்கு மட்டு வாழ்ந்தால் தீயபலி. இந்த வாழ்க்கை எலிப்பொறியில் அகப்பட்ட எலியைப் போன்றது.

எலி வடை தனக்குத்தான் என்று எண்ணி அதை எடுக்கப் போய் அகப்பட்டு பலியாகிறது. இதை பார்த்த மீதி எலிகளும் அடுத்த நாள் அகப்பட்டுக் கொள்கின்றன. அது போல மனிதனும் உலகம் தன் சொல்படி கேட்டு தனக்கு பலியாகும் என்று எண்ணி பலியாகிறான். இதைப் பார்த்த பின்னும் எல்லா மனிதகர்களும் எலிகளைப் போல் பலியாகிக் கொண்டே இருக்கின்றனர். என்று தணியும் இந்த உலக பலி கள்?


ஆன்மிகமலர்


## கசப்பு மருந்தும், கடவுளும்

கடவுளும் மனிதனும் ஒன்றுதான். ஆனால் கடவுள் இயங்குகிறான். மனிதன் அப்படி அல்ல. குருநாதர்கள் கடவுளை எப்படியாவது மனித சமுதாயத்திற்குள் நுழைக்க விரும்புகிறார்கள். கடவுள் மனிதனுக்கு கசப்பு மருந்து போல் அவசியம் தேவைப்படுகிறது.

அதனால் பலர் அதை ஏற்றுக் கொள்ள தயங்குகிறார்கள். அதனால் குருநாதன் அந்தக் கடவுளை தத்துவம் வழிபாடு பூஜை என்ற ஒரு சிறிய பைக்குள் வைத்துத் தருகிறார்கள். அது தேவை இல்லைதான். ஆனால் கசப்பை மறைத்து விடுகிறது.

வயிற்றுக்குள் சென்றதும் கரைந்து விடுகிறது. கசப்பு மருந்து வேலை செய்ய துவங்குகிறது. உடல் தேறி விடுகிறது. பூஜைகளும் மந்திரங்களும் இப்படியே. கடவுளிடம் விருப்பம் வந்து விட்டால் இவை அனைத்தும் மாயமாய் மறைந்துவிடும். மறையாவிட்டாலும் நாம் துன்பப்படமாட்டோம்.

(ஞானிகள் அருளிய "ஸ்ரீதத்தகளஞ்சியம்" என்ற நூலிலிருந்து)

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# சந்தன காப்புடன் காட்சிதரும் மாசிலாமணீஸ்வரர்

சென்னை ஆவடி சாலையில் திருமுல்லைவாயில் உள்ளது. பூந்தமல்லியிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டைக்குச் செல்லும் பேருந்தில்சென்றால் ஆவடியை அடுத்து, திருமுல்லைவாயி லை அடைந்து 1கி. மீ. சென்று கோயிலை அடையலாம்.

வாளால் வெட்டப்பட்டதால் மாசிலாமணீஸ்வரர் குளிர்ச்சி வேண்டி எப்போதும் சந்தனக் காப்பிலேயே காட்சி தருகிறார். வருடத்திற்கு ஒருமுறை சித்திரை மாதம் சதய நட்சத்திரத்தன்று மட்டும் பழையது நீக்கி புதிய சந்தனக் காப்பு சாத்தப்படும்.

மூலவர் அற்புதமான சுயம்பு மூர்த்தி; உயரமான லிங்கம். மேற்புறம் வெட்டுப்பட்டுள்ளது.

தேவாரப்பாடல் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் இது 22வது தலம்.

சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 255 வது தேவாரத்தலம் ஆகும்.

**இறைவர் திருப்பெயர்:** நிர்மலமணீஸ்வரர், பாசுபதேஸ்வரர், மாசிலாமணீஸ்வரர்.

**இறைவியார் திருப்பெயர்:** லதாமத்யாம்பாள், கொடையிடைநாயகி, கொடியிடையம்மை.

**தல மரம்:** முல்லை.

**தீர்த்தம்:** கல்யாண தீர்த்தம்.

**தேவாரப் பாடல்கள்:**

சுந்தரர் திருவுமெய்ப் பொருளுஞ்.

திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமும்எனக்குன்
சீருடைக் கழல்கள்என் றெண்ணி
ஒருவரை மதியா துறாமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.

**தலவரலாறு**

இது தொண்டை நாட்டுத் தலம்; (வட) திருமுல்லைவாயில் ஆகும்; சோழநாட்டில் தஞ்சை மாவட்டத்தில் (தென்) திருமுல்லைவாயில் உள்ளது குறிப்பிடத்தக்கது. வாளால் வெட்டப்பட்டதால் மாசிலாமணீஸ்வரர் குளிர்ச்சி வேண்டி எப்போதும் சந்தனக் காப்பிலேயே காட்சி தருகிறார். வருடத்திற்கு ஒருமுறை சித்திரை மாதம் சதய நட்சத்திரத்தன்று மட்டும் பழையது நீக்கி புதிய சந்தனக் காப்பு சாத்தப்படும்.




www.aanmeegamalar.com






காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்த தொண்டை நாட்டின் அரசன் தொண்டைமான் ஒரு முறை அவனது எதிரி குறும்பர்களால் போரில் தோற்கடிக்கப்பட்டான். போரில் தோல்வியுற்ற தொண்டைமான்தனது யானையின் மீது மிகவும் மனம் நொந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோது, யானையின் கால் களை முல்லைக் கொடிகள் சுற்றிக்கொண்டன.

யானை முன்னேறிச் செல்ல மிகவும் கஷ்டப் பட்டதால் தொண்டைமான் தனது வாளினால் முல்லைகை கொடிகளை வெட்டி யானை முன் னேறிச் செல்ல வழி ஏற்படுத்தினான். அப்போது வாள் பட்டு முல்லைக் கொடிகளின் கீழிருந்து இரத்தம் வருவதை கண்டான். யானையிலிருந்து கீழே இறங்கி முல்லைக் கொடிகளை விலக்கிப் பார்த்தபோது அங்கு ஒரு சிவலிங்கம் இருப்பதை பார்த்தான்.

இறைவனை வணங்கி தான் செய்த தவறை பொருத்துக் கொள்ளும்படி அவரிடம் வேண் டினான். இறைவன் அவன்முன் தோன்றி அர சனை வாழ்த்தி அருளி அவனுக்குத் துணையாக நந்தியம்பெருமானையும் போருக்கு அனுப்பினார். அரசன் குறும்பர்களுடன் மறுபடியும் போர் செய்து அதில் அவர்களை வென்று தனக்கு உதவி செய்த இறைவனின் கருணையைப் போற்றி சிவபெருமானுக்கு அவ்விடத்தில் ஒரு ஆலயம் எழுப்பினான்.

குறும்பர்களை வென்று அவர்கள் கோட் டையிலிருந்து கொண்டுவந்த இரண்டு வெள்ளெருக்கு தூண்களை தான் எழுப்பிய சிவாலயத்தில் இறைவனின் கருவறை முன்பு பொருத்தி வைத்தான். அதுவே இந்த மாசிலா மணி ஈஸ்வரர் ஆலயம் என்று தல வரலாறு கூறுகிறது மூலவர் கருவறை முன்பு அந்த இரண்டு வெள்ளெருக்கு தூண்களை இன்றும் காணலாம்.

தெற்கில் உள்ள ராஜகோபுரம் இவ்வாலயத்தின் நுழைவு வாயிலாகும். தெற்கு கோபுரத்திற்கு முன் ஒரு 16 கால் மண்டபம் உள்ளது கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றவுடன் பிரசன்ன கணபதி நம்மை வரவேற்கிறார். தெற்கு வெளிப்பிரகாரத்தில் உள்ள மற்றொரு நுழைவு வாயில் வழியாக உள்ளே சென்றால் முதலில் இறைவி கொடியிடை நாயகி சந்நிதி கிழக்கு நோக்கி இருக்கிறது. அதைகடந்து மேலும் சென்றால் இறைவன் மாசிலாமணி ஈஸ்வரர் சந்நிதி கிழக்கு நோக்கி உள்ளது. இறைவன் மற்றும் இறைவி இரண்டும் கிழக்கு நோக்கி இருப்பதும், இறைவி கொடியிடை நாயகியின் சந்நிதி இறைவன் சந்நிதிக்கு வலப்புறம் இருப்பதும் இக்கோவிலின் ஒரு சிறப்பம்சமாகும்.

தொண்டைமானுக்கு உதவி செய்ய புறப்படும் நிலையில் நந்தி சிவபெருமானை





நோக்கி இல்லாமல் கோவில் வாசலை நோக்கி திரும்பி உள்ளது. இறைவன் கருவறை சுற்றுப் பிரகாரத்தில் மேற்குச் சுற்றில் நால்வர் திருஉருவங்கள் உள்ளன. மேலும் மேற்குச் சுற்றுச் சுவரில் 63 நாயன்மார்கள் உருவங்கள் சித்திரங்களாக காட்சி அளிக்கின்றன.

கருவறையின் வடக்குச் சுற்றில் நடராஜர் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. இத்தலத்து இறைவி கொடியிடை அம்மனை பௌர்ணமி நாளில் மாலை வேளையில் வழிபடுவது மிகவும் விஷேசமாக கருதப்படுகிறது. இத்தலத்தில்முருக பெருமான் ஒரு திருமுகத்துடனும், நான்கு திருக் கரங்களுடனும், தனது தேவியர் இருவருடன் எழுந்தருளியுள்ளார்.

இத்தல முருகப்பெருமானை அருணகிரிநாதர் தனது திருப்புகழில் பாடியுள்ளார். திருப்புகழில் இத்தலத்து முருகன் மீது மூன்று பாடல்கள் உள்ளன. இக்கோவிலில் நவக்கிரகங்களுக்கு தனி சந்நிதி கிடையாது. வசிஷ்ட முனிவர் இத் தலத்திற்கு வந்து தவம் செய்து தெய்வீகப் பசு காமதேனுவை பெற்றார் என்று புராணங்கள் தெரிவிக்கின்றன.

மூலவர் அற்புதமான சுயம்பு மூர்த்தி; உயரமான லிங்கம். மேற்புறம் வெட்டுப்பட்டுள்ளது. எப்போதும் சந்தனம் சார்த்தப்பட்டிருக்கும், ஆதலால் அபிஷேகங்கள் சிரசில் கிடை யாது; ஆவுடையாருக்கு மட்டும் தான். வருடத்திற் கொருமுறை சித்திரை சதயத்தில் சந்தனக் காப்பு களையப்பட்டு மீண்டும் சார்த்தப் படுகிறது. அது அடுத்த சித்திரை சதயம் வரை அப்படியே சுவாமி மீது இருக்கும். சுவாமிக்கு, வெந்நீர் அபிஷேகம். அபிஷேக காலங்களில் மேன்மேலும் சந்தனம் சார்த்தப்படும்; ஆனால் களையப்படுவதில்லை. இதனால் சுவாமிமீது எப்போதும் சந்தனக் காப்பு இருந்து கொண்டே இருக்கும். இத்தலத்தில்தான் சிறப்புமிக்க வைஷ்ணவி ஆலயமும், பிரார்த்தனைக் கோயிலாகிய 'பச்சையம்மன் கோயிலும்' உள்ளன. இக்கோயில் தொடர்பாகச் சொல்லப்படும் செவிவழிச் செய்தியொன்று வருமாறு : சென்னைப் பொன்னேரிப் பாதையில் மீஞ்சூருக்கு அருகில் உள்ள மேலூரில் வீற்றிருக்கும் திருவுடை நாயகியம்மை; சென்னை திருவொற்றியூரில் வீற்றிருக்கும் வடிவுடையம்மை; இத்தலத்து கொடியிடை அம்மை ஆகிய மூன்று திருவுருவங்களும் ஒரே ஸ்தபதியால் செய்யப்பட்டவை என்றும்; வெள்ளிக்கிழமை பௌர்ணமி சேர்ந்து வரும் நாளில் இம்மூன்று அம்பிகைகளையும் ஒரே நாளில் முறையே காலையிலும், நண்பகலிலும், மாலையிலும் தரிசித்தல் பெருஞ் சிறப்பு என்றும் சொல்லப்படுகிறது..


சிவத்திரு.குமரேசன்

– சிவத்திரு.குமரேசன்
இராஜசிம்மன்
பேராசிரியர்
S.I.V.E.T கல்லூரி
சென்னை
மொபைல் :
919003296221
easanaithedi.in



# ருத்திராட்சத்தால் செய்யப்பட்ட

# சோட்டானிக்கரை பகவதி அம்மன்





கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் இருந்து 20 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது சோட்டானிக் கரை, இங்கு உள்ள பகவதி அம்மனைசோட் டானிக்கரை பகவதி அம்மன் என்று அழைக் கப்படுகிறார். இது 2000 ஆண்டுகள்பழைமை யான கோவிலாகும். கேரளாவின் பகவதி வழிபாடு நடைபெறும் கோவில்களில் இத்திருக் கோவில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

பெண்களின் சபரி மலை என்ற சிறப்பும் சோட் டானிக்கரை பகவதி அம்மனுக்கு உண்டு. இந்த அம்மனை வழிப்பட்டால் திருமணம்ஆகாத பெண்களுக்கு திருமணமும், தீர்க்க ஆயுளும் கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

பில்லி, சூனியம் ஏவல் போன்றவற்றில் இருந் தும் அம்மனை வழிப்பட்டு பக்தர்கள் பலன்பெறு கிறார்கள்.

மூன்றரை அடி உயரம் கொண்ட இந்த சிலை ரூத்திராட்சத்தால் செய்யப்பட்டது. இங்கு அதிகாலை நிர்மால்யம் தரிசனம் முடிந்தும் தங்க அங்கி அணிவிக்கப்படுகிறது. கேரளாவின் பகவதி வழிபாடு நடைபெறும் கோவில்களில் இந்த கோவிலுக்கும் முக்கிய பங்கு உள்ளது.

இங்கு ஆதிவாசிகள் அதிகளவு வாழ்ந்து வந்தனர். ஆதிவாசிகளின் தலைவனான கண் ணப்பன் என்பவர் பசுக்களை கொன்று அதன் இறைச்சி உண்பவராக இருந்தார். ஒருநாள் அவரது மகள் தந்தையால் கொல்லப்பட இருந்த பசு மாட்டை காப்பாற்றினாள்.

மகள் மீது அதிக பாசம் கொண்ட கண்ணப்பன் அன்று முதல் தானும் பசுவை வதைப்பதில்லை என்று சபதம் செய்தார். ஆனாலும் அவர் முன்பு செய்த பாவம் காரணமாக அவரது அன்பு மகள் உயிர் துறக்கும் நிலை ஏற்பட்டது.

இதனால் மனவேதனையுடன் காணப்பட்ட கண்ணப்பன் கனவில் அவரது மகளால் காப்பாற்றப்பட்ட பசு தோன்றியது. தான் பசு வடிவில் வந்த தேவி என்றும், கண்ணப்பனின் மாட்டு தொழுவத்தில் தான் சிலை யாக காட்சி அளிப்பதாகவும் அருகில் மகாவிஷ்ணு சிலையும் இருக்கும் என்று கூறி விட்டு அந்த பசு மறைந்து விட்டது.



அழகுராஜா

மறுநாள் தொழுவத்திற்கு சென்று பார்த்த கண்ணப்பன் அங்கு தேவி சிலையும், மகாவிஷ்ணு சிலையும் இருப்பதை பார்த்து அதை இயற்கை கோவிலாக்கி வழிபாடு செய்யத் தொடங்கினார். அந்த கோவில் புதர்கள் அடர்ந்து காடாக மாறியது.

இந்த நிலையில் ஒரு பெண் புல்வெட்டும்போது அவரது அரிவாள் பட்டு விக்ரகத்தில் இருந்து ரத்தம் வடிந்துள்ளது. இதுபற்றி அங்குள்ள பெரிய நம்பூதிரியிடம் தெரிவிக்கப்பட்டது. அவர் தேவபிரசனம் பார்த்து தேவியின் பெருமையை உணர்ந்து மீண்டும் வழிபாடு நடைபெற ஏற்பாடு செய்தார். அந்த தேவியே சோட்டானிக்கரை பகவதி அம்மனாக அருள்பாலிக்கிறார்.

இந்த மண்டபத்தில் உள்ள கொடிமரம் அருகில் நின்று பார்த்தால் மூலஸ்தானத்தில் உள்ள தேவி பகவதியை கண் குளிர தரிசிக்கலாம். குழந்தைகளை முதன் முதலாக பள்ளியில் சேர்ப்பவர்கள் பிரகாரத்தின் வடக்கு பக்கம் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் விசேஷ பூஜை செய்து வழிபாடு நடத்துகிறார்கள்.

இங்கு 12 ஆயிரம் புஷ்பாஞ்சலி செய்வதும், அம்மனுக்கு சிவப்பு நிற பட்டுபுடவை காணிக்கை யாக கொடுப்பதும் சிறப்பு வாய்ந்ததாக கருதப் படுகிறது. பண்டைய காலத்தில் இங்கு உயிர் பலி கொடுக்கப்பட்டாலும் தற்போது அது கைவிடப்பட்டு, சைவ வழிபாடு நடை பெறுகிறது.

பில்லி சூனியம், ஏவல் போன்ற வற்றால்பாதிக்கப்படுபவர்கள்இங்கு வந்து நலம் பெற்று செல்கிறார்கள். பக்தர்கள் மனம் சார்ந்த கோளாறுகள் கொண்ட தங்களது உறவினர்கள் மற்றும் குடும்பத்தினரை இந்த கோவிலுக்கு அழைத்து வந்து அன்னையை வழிபட்டு பூரண குணம் பெற்று செல்வதை காண முடிகிறது. சோட்டானிக்கரை பகவதி அம்மன் கோவிலில் நடைபெறும் பிரச்சித்தி பெற்ற பூஜைகளில் ஒன்று தான் குருதிபூஜையாகும். இந்த கோவிலின் கீழ்காவில் நடைபெறும் குருதிபூஜையில் பக்தர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு அம்மன் அருள்பெற்று செல்கிறார்கள்.

முன்பு இங்கு வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே குருதிபூஜை நடத்தப்பட்டு வந்தது. இப்போது இந்த பூஜை ஒவ்வொரு நாளும் நடத்தப்படுவது சிறப்பாகும். ஆண்டுதோறும் இந்த கோவிலில் நடைபெறும் சோட்டானிக்கரை மகம் என்ற திருவிழா மாசிமகத்தில் நடைபெறுகிறது.

அப்போது ஏராளமான பக்தர்கள் இங்கு திரண்டு வந்து அம்மனை தரிசனம் செய்கிறார்கள். திருமணமான பெண்களுக்கு தீர்க்க ஆயுளும், திருமணமாகாத பெண்களுக்கு திருமணம் கைகூடும். குழந்தை இல்லாதவர்களுக்கு அந்த பாக்கியம் கிடைக்கும் என்பதும், மாசி மகம் வழிபாடின் ஐதீகமாக இருக்கிறது.

இங்கு தேவியின் வலது பக்கம் மகாவிஷ்ணு இருப்பதால் அம்மே நாராயணா, தேவி நாராயணா, லட்சுமி நாராயணா, பத்ரி நாராயணா என்று பக்தர்கள் போற்றி பாடுகிறார்கள்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182



இதுவரை
வெளிவந்த
அனைத்து
இதழ்களையும்
எந்தவித
கட்டணமின்றி
முற்றிலும்
இலவசமாக
படிக்க













aanmeegamalar.com

இணையதளத்தை

பார்க்கவும்









# கருவில் உள்ள குழந்தையின் வளர்ச்சியும் வணங்க வேண்டிய இறைவனும்

"கர்ப்பம் தரித்தது முதல் ஒவ்வொரு மாதமும் கிரகங்கள் ஆதிக்கத்தை செலுத்துகின்றன"

ஒரு பெண்ணின் வயிற்றில் கரு உருவானதில் இருந்து குழந்தை பிறப்பு வரை 10 மாதங்களுக்கு அதன் வளர்ச்சியில் கிரகங்கள் தங்கள் ஆதிக்கத்தை செலுத்துகின்றன.

அதனால், கர்ப்பம் தரித்தது முதல்... ஒவ்வொரு மாதமும் அந்தக் கருவை ஆளுமை செய்யும் கிரகத்தின் தெய்வத்தை வணங்குவது சிறப்பு.

## முதல் மாதம்

கரு உருவாகும். இதற்கு காரக கிரகம் சுக்கிரன். இந்திராணி, ஸ்ரீபுவனேஸ்வரி, லட்சுமியை வணங்கலாம்.

## 2வது மாதம்:

இந்த மாதம் கரு சற்று மென்மை தன்மையை அடைந்து இருக்கும். செவ்வாய் அதிபதி. முருகனையும், க்ஷேத்ர பாலகர்களையும் வணங்க வேண்டும்.

## 3வது மாதம்

குழந்தையின் கை, கால் உருவாகி இருக்கும். குரு அதிபதி. இந்திரன், பிரம்மா, தட்சிணா மூர்த்தியை வணங்க வேண்டும்.

## 4வது மாதம்

குழந்தையின் எலும்பு, நரம்பு உருவாகும் மாதம். சூரியன் அதிபதி. சிவனை வணங்கிவர, கரு நல்ல வளர்ச்சி பெறும்.

## 5வது மாதம்

குழந்தையின் தோல் மூலம் உடலமைப்பு உரு வாகிக் கொண்டிருக்கும். சந்திரன் அதிபதி. கௌரி, துர்கை அம்மனை வணங்க வேண்டும்.

## 6வது மாதம்

குழந்தையின் அங்கம், ரோமம், நகம் உருவாகும். சனி அதிபதி. ஆஞ்சநேயர், பைரவர், விநாயகரை வழிபடவும்.

## 7வது மாதம்

பிராணன் உருவாகும். புதன் அதிபதி. விஷ்ணு வை வணங்க வேண்டும்.

## 8வது மாதம்

கருவின் உடல் வளர்ச்சி பெருகும். விநாயகரை வணங்க வேண்டும்.

## 9வது மாதம்

கரு முழு வளர்ச்சி பெற்றிருக்கும். சந்திரனே அதிபதி. கௌரி, துர்கையை வழிபட வேண்டும்.

## 10வது மாதம்

குழந்தை பிறந்துவிடுவதால் ஆத்ம பலம் பெறும். இதற்கு ஆத்மகாரகன் சூரியன் அதிபதி. சிவனை வழிபட வேண்டும்



www.aanmeegamalar.com
ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



# தினமும் இராமேஸ்வரம் வந்து செல்லும்
# பூரி ஜெகன்நாதர்

❖ ஸ்ரீ பூரி ஜெகன்நாதர் கோவிலில் குடிகொண்டிருக்கும் விஷ்ணு பகவான், தினமும் காலையில் எழுந்து ராமேஸ்வரம் சென்று விட்டு, மதிய உணவுக்கு மீண்டும் இந்த பூரி ஜெகந்நாதர் ஆலயத்துக்கு வந்துவிடுவதாக ஒரு ஐதீகம் உண்டு.

❖ அதனால் தினந்தோறும் இந்த கோவிலில் இறைவனுக்காக விருந்து மிகவும் தடபுடலாக செய்யப்படுகிறது.

❖ இந்த விருந்து சமைக்கும் முறையே சற்று வித்தியாசமானது.

❖ கோயிலின் சமையலறை உலகிலேயே மிகப் பெரியது, பாரம்பரியம் மிக்கது.

❖ 56 வகையான சைவ உணவுகள் வெங்காயம், பூண்டு இல்லாமல் தயாரிக்கப்படுகின்றன.

❖ கங்கா மற்றும் யமுனை எனப்படும் சமையலறைக்கு அருகில் உள்ள இரண்டு தீர்த்தக் கிணறுகளில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீரைப் பயன்படுத்தி மண் பானைகளில் மட்டுமே சமையல் செய்யப்படுகிறது.

❖ இந்த கோவிலின் சமையலறையில் ஒன்றன் மேல் ஒன்றாக ஏழு மண் பாத்திரங்கள் அடுக்கப் பட்டு விறகு அடுப்பில் உணவு சமைப்பார்கள் அப்படி சமைக்கும்போது அடியில் உள்ள பானையில் உணவு வேகும் முன் மேலே உச்சியில் உள்ள முதல் பானையில் உணவு வெந்து விடும் அதிசயம் நடக்கிறது.

❖ தினந்தோறும் சமைத்த பின் மண்பானைகள் உடைத்துவிடுவார்கள். தினம் தினம் புதுபானை சமையலுக்கு பயன்படுத்தபடுகிறது.

❖ இந்த கோவிலின் உள்ளே சமைக்கப்படும் உணவின் அளவு வருடத்தின் அனைத்து நாட்களிலும் ஒரே அளவாகவே இருக்கும். ஆனால் வருகின்ற பக்தர்கள் எண்ணிக்கை இரண்டு லட்சமானாலும் சரி இருபது லட்ச மானாலும் சரி சமைக்கப்பட்ட உணவு அனை வருக்கும் சாப்பிட கிடைக்கும்.

❖ கோவில் சமையலறைகளில் அனைத்து மகா பிரசாத் சமையல்களும் பேரரசின் மகாராஷ்மி தேவியால் மேற்பார்வையிடப் படுகின்றன என்று பாரம்பரியம் கூறுகிறது

❖ தயாரிக்கப்பட்ட உணவில் ஏதேனும் தவறு இருந்தால், கோவில் சமையலறைக்கு அருகில் ஒரு நிழல் நாய் தோன்றுகிறது, இது அவளது அதிருப்தியின் அறிகுறியாகும். நிழல் நாய் காணப்பட்டால், உணவு உடனடியாக புதைக் கப்பட்டு ஒரு புதிய தொகுதி சமைக்கப்படுகிறது.

www.aanmeegamalar.com



# பில்லி, சூன்யம், ஏவல்கள், வியாதி, மனநோய் பிரச்சனை தீர்க்கும்

# ஸ்ரீ சுதர்சன மஹாமந்திரம்

சுதர்சன மஹாமந்திரத்தை தினமும் காலையில் சொன்னால், அஞ்ஞான இருள் விலகும். எல்லா பிரச்சனைகளும் மறைந்து போகும். ஆபத்து நீங்கும். பயம் விலகும். தைரியம் பிறக்கும். சந்தோஷம் நிலைக்கும்.

பில்லி, சூன்ய, ஏவல்கள், எதிரிகள் தொல்லை, நாள்பட்ட வியாதி, மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள், புத்தி ஸ்வாதீனம் இன்மையால் சிரமப் படுவோர், ஜாதகப்படி மத்திம ஆயுள் போன்ற உபாதைகள் உள்ளவர்கள் சுதர்சன மந்திரத்தை பாராயணம் செய்து வந்தால் அனைத்துக் குறைகளும் நீங்கும்.

ஸ்ரீசுதர்சனரின் நாள் வியாழக்கிழமை. இந் நாளில் அவருக்கு சிவப்பு மலர்களால் மாலை சூட்டி வழிபட்டால் நினைத்த நல்ல காரியங்களில் வெற்றி கிட்டும்.

விடியற்காலையில் சூரிய உதயத்திற்கு முன்பு குளித்து, சுத்தமான உடை அணிந்து கிழக்கு நோக்கி அமர்ந்து, கண்ணை மூடிக்கொண்டு குறைந்தபட்சம் ஒன்பது தடவை அதிக பட்சம் 108 தடவை பாராயணம் செய்தால் அவர்களுக்கு பீடைகள் ஒழியும். சௌபாக்கியம் பிறக்கும்.

## ஸ்ரீ சுதர்ஸன மஹாமந்திரம்

ஓம் க்லீம் க்ருஷ்ணாய ஹ்ரீம்
கோவிந்தாய ஸ்ரீம் கோபி
ஜனவல்லபாய ஓம்பராய
பரமபுருஷாய பரமாத்மனே!
மமபரகர்ம மந்த்ர தந்த்ர யந்த்ர
ஔஷத அஸ்த்ர
ஸஸ்த்ர வாதப்ரதிவாதானி ஸம்ஹர
ஸம்ஹர
ம்ருத்யோர் மோசய மோசய
ஓம் மஹா சுதர்சனயா
தீப்த்ரே ஜ்வாலா பரிவ்ருதாய ஸர்வதிக்
க்ஷோபனஹராய
ஹும்பட் பரப்ரஹ்மணே ஸ்வாஹ






பாரம்பரியமான, சத்தான, சுவையான சமையல் குறிப்புகளை மிக எளிமையாகவும், தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதா சமையல்**

(geetha samayal)

youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# ஆன்மீக வழியில் அமைதி

**44**

நாம் துன்பங்களை மனதளவிலோ, உடலளவிலோ அனுபவிப்பதற்குக் காரணம் முன்ஜென்மத்திலோ, இந்த ஜென்மத்திலோ செய்த பாவகர்மங்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அதேபோல் துன்பங்களுக்கு மட்டும் அல்லாமல் நாம் அனுபவவிக்கும் இன்பங்களுக்கும் மனதளவிலோ, உடலளவிலோ அனுபவிப்பதற்குக் காரணம் நாம் இந்த ஜென்மத்திலோ முன் ஜென்மத்திலோ செய்த புண்ணிய கர்ம பலன்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நாம் ஆன்மீக வழியில் நடந்து சென்றால், மனம் பக்குவ நிலையடைந்து துன்பத்தில் இருந்து விடுதலை பெற்று நம் மனதுக்கு அமைதி கிடைக்கும். நமது புராணக்கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் அடையும் துன்பங்களுக்குக் காரணம் முன் ஜென்மத்தில் செய்த கர்மபலன்கள் என்று விவரிக்கிறது.

எடுத்துக்காட்டாக நாம் உணர்ச்சி மிகுதியில் ஒருவரை கோபத்தில் அவர் மனம் புண்படும்படியாக பேசி விடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அவர் பதிலுக்கு நம் மீது கோபப்படாமல் இருந்து விட்டால், அவர் மனதளவில் எந்த அளவுக்கு வேதனைப்பட்டாரோ, அத்தகைய வேதனையை நாமும் அனுபவவிப்போம். இதனை நாம் உணர்வதில்லை. அவ்வாறு நாம் உணர்ந்து கொள்ளும்போது மற்றவர்களை புண்படும்படி பேசவோ செயல்பாடுகளில் ஈடுபடமாட்டோம். நமது துன்பத் திற்கு காரணம் எது என்பது பற்றி நாம் தனிமையில் இருந்து சிந்தித்து பார்த் தால், அதற்கு விடை கிடைக்கும். நமது மனமும் உடலும் ஏதோ ஒருவிதத்தில் மனதள வில் உடலளவில் மற்றவர்களுக்கு கொடுத்த துன்பத்தை நாம் அனுபவவிக்க நேரிடுகிறது. நம் அடையும் துன்பங்களுக்குக் காரணம் நாம்தான் என்பதை உணரவேண்டும்.



அவ்வாறு உணர்ந்து கொள்ளும்போது அதே தவறை மீண்டும் செய்யாமல் இருப்பதற்கு முயற்சிகளை நாம் மேற்கொள்ளவேண்டும். மனிதனுக்கு அத்தகைய மனப்பக்குவம் வருவதற்கு ஆன்மிகம் துணை புரிகிறது. சாதாரண மனிதர்கள் மட்டுமல்ல ஆன்மீகத்தில் ஈடுபட்டுள்ள ஆன்மீக அன்பர்கள் பக்தியில் ஆழ்ந்து இருந்தாலும் சூழ்நிலை காரணமாகக்கூட மற்றவர்களை மனதளவில் உடலளவில் துன்பப்படுத்தக்கூடாது. பிறரைத் துன்புறுத்தினாலும் மற்ற உயிர்களைத் துன்புறுத்தினாலும் அத்தகையவர்கள் துன்பத்திலிருந்து விடுபடுவதில்லை.

எடுத்துக்காட்டாக பக்த ராமதாஸ் என்பவர் ராமர் மீது மிகுந்த பக்தி செலுத்தி வந்துள்ளார். அவர் செய்யாத குற்றத்திற்காக, தண்டனையாக சிறையில் அடைக்கப்பட்டார். அவர் சிறையில் அடைபட்டு துன்பப்படுவதற்குக் காரணம் முன் ஜென்மத்தில் சிறுவனாக இருக்கும்போது அவர் அறிந்தோ அறியாமலோ ஒரு கிளியைப் பிடித்துக் கூண்டில் அடைத்து வைத்து, அதன் மூலம் மகிழ்ச்சி அடைந்துள்ளார். அவர் ராமர் மீது இந்த ஜென்மத்தில் மிகுந்த பக்தியாக இருந்தபோதிலும், அந்த கர்மபலன் இந்த ஜென்மத்தில் அவரை விடவில்லை. கர்மபலன் காரணமாக அவர் செய்யாத குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டு துன்பப்பட்டார்.

அவர் துன்பப்படுவதற்குக் காரணம் கிளியை கூண்டில் அடைத்து அதனை துன்பப்படுத்தியதினால் இந்த ஜென்மத்தில் சிறையில் அடைக்கப்பட்டு துன்பப்பட்டார். இதிலிருந்து நாம் ஒன்றை புரிந்து கொள்ளவேண்டும். முன்ஜென்மத்தில் செய்த பாவங்கள், அவன் அடுத்த பிறவியிலும் பாவத்திற்குரிய தண்டனை தொடரும் என்பதை பக்த ராமதாஸ் கதை மூலம் உணர்ந்து கொள்ளலாம். ஆன்மீக வழியில்

சென்றால் இதுபோன்ற புராணக்கதைகள் மூலம் நாம் அறிந்து கொள்ளவும் நமது மனம் பக்குவப்பட்டு மனம் அமைதி அடையவும் முடியும். ‘தீதும் நன்றும் பிறர் தர வாரா’ என்பதை மனதில் நினைத்துக்கொள்ளவேண்டும். நல்லதைப் பேசி நல்லதை மட்டும் மனதில் நினையுங்கள். நல்லதை மட்டும் கடவுளிடம் வேண்டுங்கள் நல்லதே நடக்கும்.

உலகில் மற்றவர்களைத் துன்படுத்தினாலும் தர்மத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டாலும் அவன் சொகுசாக இன்பமாக இருப்பதை நமது கண்கள் எதிரே காண்கிறோம். மற்றவர்களை துன்புறுத்தி வாழ்ந்தாலும் அவன் இன்பமாக வாழ்ந்து கொண்டிருப்பதை கண்டு திகைத்து நிற்கிறோம். அவன் இன்பமாக மகிழ்ச்சியாக வாழ்வதற்கு காரணம் முன் ஜென்மத்தில் அவன் செய்த தர்ம காரிங்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இதிலிருந்து மனிதன் செய்யும் பாவ புண்ணிய பலன்களை அடுத்த ஜென்மத்திலும் தொடரும் என்பதை ஆன்மிகம் தெளிவுபடுத்துகிறது. இதனை நாம் புரிந்து கொண்டால் மனிதன் தான் செய்யாத குற்றத்திற்காக துன்பப்படுவதை நினைத்து வருத்தப்படமாட்டான். நாம் முன்ஜென்மத்தில் செய்த கர்மபலன்தான் காரணம் என்று நினைத்து அவன் மனம் வருந்துவதில்லை.

உலகில் பாவச்செயல்களை பற்றி வள்ளல் பெருமான் தனது அருள்மொழியில் ஏழைகள் வயிறு எரியச் செய்வது பாவம். பசித்தோர் முகத்தை பாராதிருப்பது பாவம். கோள் சொல்லி ஒருவர் குடும்பத்தைக் கலைப்பது பாவம். தனது குருவை வணங்க கூசி நிற்பது பாவம். மாமிசம் உண்டு உடலை வளர்ப்பது பாவம். கல்லும் நெல்லும் கலந்து விற்பது பாவம். தவம் செய்வோரை தாழ்த்தி பேசுவது பாவம். தாய் தந்தை மொழியை தட்டி நடப்பது பாவம். நல்லோர் மனதை நடுங்க செய்வது பாவம். தானம் கொடுப்போரை தடுப்பது பாவம் என்று பாவச்செயல்களை இவ்வாறு பட்டியலிட்டு தெளிவுபடுத்திக் கூறுகிறார்.

முன் ஜென்மத்தில் நாம் செய்த பாவ புண்ணிய கர்மபலன்களை தீர்ப்பதற்கு, துன்பங்கள் இன்பங்கள் எல்லாம் அனுபவிப்பதற்கு இந்த மனிதப்பிறவியைப் எடுத்துள்ளோம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இதனை அறிந்து கொள்வதற்கு ஆன்மிகம் துணை புரிகிறது. அதன்மூலம் மனம் பக்குவப்பட்டு அமைதியை அடைகிறது. மனித உடல் பலவிதமான மாற்றங்களை அடைகிறது. கருவில் இருக்கும்போது சிசு,குழந்தை, சிறுவன், இளைஞன், முதியவன்,

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

என உடலில் மாற்றங்களை நாம் உலகில் காணுகிறோம். ஒவ்வொரு வளர்ச்சியிலும் துன்ப இன்பங்களை அனுபவவிக்கிறோம்.

மனிதப் பிறவியை நினைத்துப் பார்த்தால், மனித உடல் ஆறு விதங்களில் மாற்றம் ஏற்படுகிறது. தாய் கர்ப்பத்தில் இருக்கும்போது மனிதன் சிசுவாக அழைக்கப்படுகிறான். இதேபோல் மனித உடல் , குழந்தை, சிறுவன் இளைஞன் முதியவர் என்ற நிலையில் அழைக்கப்படுகிறான். இந்த உடல் குறிப்பிட்டவருடங்களுக் குப்பின் வளர்ச்சி பெறுவதில்லை. அதேபோல் இந்த மனித உடல் குறிப்பிட்ட வருடங்களுக்குப்பின் உடல் உறுப்புகள் தேய்ந்து பலவீனம் அடைந்து, இறுதியில் மரணத்தை தழுவுகிறது. ஸ்தூல உடல் ஆறுவிதங்களில் விகாரங்களை மாற்றங்களை அடைகிறது. கடவுள் மனிதனாக அவதாரம் செய்தாலும் அதே நிலைதான். ராமர் அவதார புருஷராக இருந்தாலும் மனிதனாக பிறவி எடுத்ததால்தான் மனிதன் அடையக்கூடிய இன்ப துன்பங்களை அவர் அனுபவித்ததாக இராமாயணம் கூறுகிறது.

மனிதர்களில் சிலர் மனிதப்பிறவி எடுத்தாலும், உடல் எடுத்தபின் ஜீவசமாதி அடைவார். ஜீவனாக இருக்கும்போது தன்னோட விருப்பப்படி ஜீவனை பரம்பொருளுடன் இரண்டறக் கலந்து பிரம்ம சொரூபமாக இருப்பார்கள். இவைகள்தான் ஸ்தூல சரீரத்தின் தன்மையாகும். மரணம் என்பது மனித உடலுக்கு மட்டும்தான். மரணம் என்பது ஆத்மாவிற்கும் அல்ல. ஆத்மா அழிவில்லாத பரம்பொருள். உலகில் பலவிதமான உடல்கள் இருப்பதுபோல் பலவிதமான மனித மனங்களும் இருக்கின்றன. குணங்களும் மாறுபட்டுக் காணப்படுகிறது. உலகம் என்னும் தோட்டத்தில் பலவித மலர்கள் இருப்பதுபோல் மனித மனங்களும் பல்வேறுபட்ட விதங்களில் செயல்படுகிறது. மனிதர்களைத் தவிர பறவைகள், விலங்குகள், செடி கொடிகள் போன்றவைகள் பலவிதமான வடிவங்களில் இருக்கும். அவைகளுக்கு மனிதனைப் போல் மனங்கள், எண்ண அலைகள் இருப்பதில்லை.

மனிதர்களைப்போல் மற்ற வளர்ச்சி மாற்றங்கள் உணர்வுகள் போன்றவைகள் இருக்கும். செடி கொடி தாவரங்களுக்கும்



எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்

உணர்ச்சிகள் உண்டு என்று ஜெகதீஷ் சந்திரபோஸ் என்ற விஞ்ஞானி கூறியுள்ளளார். தொட்டாஞ்சிணங்கி செடியானது நாம் தொட்டவுடன் அதன் இலைகள் சுருங்கி விடுகின்றன. இதிலிருந்து செடி கொடிகளுக்கும் உணர்வுகள் உண்டு என்பதை அறிந்து கொள்ளலாம். உலகில் பலகோடி உயிரினங்கள் நம் கண்களுக்குத் தெரியாமல் வாழ்கின்றன.

அருள் என்பது கடவுளின் கருணையாகும். அந்த அருளை எவ்வாறு பெறக்கூடும்? சிறு வெளிச்சத்தைக்கொண்டு பெருவெளிச்சத்தைப் பெறுவதுபோல, சிறிய கருணையாகிய உயிர் கருணையைக் கொண்டு இறைவனின் அருளாகிய தனிப்பெருங்கருணையைப் பெற வேண்டும். நன்மை என்பது புண்ணியம் தருவது. தீமை என்பது பாவத்தைத் தருவதாகும். புண்ணியம் தொடக்கத்தில் துன்பமாக இருக்கும் முடிவில் இன்பத்தைக் கொடுக்கும். பாவம் என்பது தொடக்கத்தில் சுகமாகவும், பின்னர் துன்பத்தில் முடிவதாகவும் இருக்கும்.

ஒருவன் பிரார்த்தனை செய்வதாக இருந்தால் அவனுக்காக மட்டும் செய்தல் கூடாது. இந்த உலகம் எல்லாம் வாழும்படியாக பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால், அதில் அவனுக்கு வேண்டிய நன்மையெல்லாம் அதிலேயே அடங்கியிருக்கிறது. எல்லா உயிர் களையும் தம்முயிராக பாவிக்கவேண்டும். அவற்றை வணங்குவது இறைவனை வணங்குவதற்கு சமம். கள், காமம், கொலை, களவு, பொய் போன்ற செயல்கள் ஒருமனிதனுக்கு கொடிய துன்பங்களைக் கொடுக்கக்கூடிய பஞ் சமகாபாதகங்களாகும். இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையன. ஆன்மீக வழியில் சென்று நல்லொழுக்கம் கடைபிடித்தால் இந்த ஐந்து விதமான மகாபாதகங்கள் ஒன்றுகூட நம்மையெல்லாம் நெருங்காவண்ணம் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று கூறிய வடலூர் வள்ளல்பெருமான் தெளிவுபடுத்தியுள்ளார்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

www.aanmeegamalar.com

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# நமது இதழ் வளர்ச்சிக்கு உதவ விருப்பமுள்ள வாசக அன்பர்கள்

## விருப்ப சந்தா செலுத்தலாம்

**எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை.**

விருப்ப சந்தா

சந்தா அனுப்புபவர்கள் UPI & வங்கி எண் வாயிலாகவும் சந்தா செலுத்தலாம்




**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)